MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

makkalkural tv

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

RNI No. 24383/1973 TN/PMG(CCR)/WPP-675/18-20 (மலர் 48 ✱ சென்னை 12–10–2020 திங்கள் மாலை ✱ வெளியூர் 13–10–2020 செவ்வாய் ✱ இதழ் 40) Regd. No. TN/CC(S)DN/122/18-20



★ 24 மணி நேரக் கட்டுப்பாட்டு அறை ★ தயார் நிலையில் படகுகள், மரம் அறுக்கும் கருவிகள் ★ தேசிய பேரிடர் மீட்புப் படை ★ நடமாடும் மருத்துவக் குழு ★ அத்தியாவசிய பொருட்கள் இருப்பு வைப்பு

## வடகிழக்கு பருவமழையை சமாளிக்க அமைச்சர்கள், அதிகாரிகளுடன் ஆலோசனை

# மக்களை பாதுகாக்க தயார் நிலையில் அரசு: எடப்பாடி அறிவிப்பு

## அதிகாரிகளுக்கு உத்தரவு

**சென்னை, அக்.12–**

**வடகிழக்கு பருவமழையை சமாளிக்க அரசு தயார் நிலையில் உள்ளது என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.**

**பருவமழையை சமாளிக்கவும், மக்களை பாதுகாக்கவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளுக்கு முதலமைச்சர் பல்வேறு உத்தரவுகளை வழங்கினார்.**

வடகிழக்கு பருவமழை அக்டோபர் மூன்றாம் வாரத்தில் துவங்கும் என்று எதிர்பார்க்கும் நிலையில், முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் தொடர்புடையதுறைகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று தலைமை செயலகத்தில் நடைபெற்றது.

ஏற்கனவே, முதலமைச்சரின் உத்தரவுப்படி தலைமை செயலாளர் க.சண்முகம் தலைமையில் 18.9.2020 அன்று வடகிழக்கு பருவமழை தொடர்பான ஆயத்த நிலை குறித்து சம்மந்தப்பட்ட துறைகளின் உயர் அலுவலர்களுடன் விரிவான ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டு, அனைத்து மாவட்டங்களிலும் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு மாவட்டங்களில் ஆயத்த பணிகளை நேரடியாக ஆய்வு மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது. மேலும், மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட கலெக்டர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டன.

### பாதிக்கப்படும் 4133 பகுதிகள்

வடகிழக்கு பருவமழையினால் உடனடியாக பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய 4,133 பகுதிகள் கண்டறியப்பட்டு, பல்வேறு துறைகளை உள்ளடக்கிய மண்டல





குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், 14,232 பெண்கள் உள்ளிட்ட 43,409 எண்ணிக்கையிலான முதல்நிலை மீட்பாளர்கள், தயார் நிலையில் உள்ளனர். கால்நடைகளை பாதுகாக்க 8,871 முதல் நிலை மீட்பாளர்களும், பேரிடர் அல்லாத காலங்களில் மரங்களை நடுவதற்கும், பேரிடர் காலங்களில் சாலைகளில் விழும் மரங்களை வெட்டி அகற்றுவதற்கும் 9,909 முதல்நிலை மீட்பாளர்கள் தயார் நிலையில் உள்ளனர். தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையினரிடம் பயிற்சி பெற்ற 5,505 காவலர்கள் மற்றும் 691 ஊர்காவல் படையினர் அனைத்து மாவட்டங்களிலும் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறையின் கீழ் 4,699 தீயணைப்பு வீரர்களும் 9,859 பாதுகாக்கும் தன்னார்வலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 3,094 கல்வி நிறுவனங்கள், 2,561 தொழிற்சாலைகள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் பாதுகாப்பு ஒத்திகை பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளது.

### 6016 தடுப்பணைகள்

பேரிடர் பாதிப்புகளை தவிர்க்கவும், குறைக்கவும் நிரந்தர வெள்ள தடுப்பு பணிகளாக 6,016 தடுப்பணைகள் கட்டப்பட்டு 11,482 கசிவுநீர் குட்டைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 7,299 ஆழ்துளை மற்றும் திறந்த வெளி கிணறுகள் நீர் செறிவூட்டும் கிணறுகளாக மாற்றப்பட்டுள்ளன.

4,154 கிலோ மீட்டர் நீளம் ஆறுகள் மற்றும் பாசன கால்வாய்கள் தூர்வாரப்பட்டுள்ளன. 9,616 ஏரிகள் மற்றும் நீர்வரத்து கால்வாய்கள் தூர்வாரப்பட்டுள்ளன. 7,989 ஆக்கிரமிப்புகள் நீர்நிலைகளிலிருந்து அகற்றப் பட்டுள்ளன. 7.53 கோடி கன மீட்டர் வண்டல் மண் அகற்றப்பட்டு, 6,70,864 விவசாயிகள் பயன்பெற்றனர். 2.55 டி.எம்.சி. கூடுதல் நீரினை சேமிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 11,387 பாலங்கள் மற்றும் 1,09,808 சிறுபாலங்களில் உள்ள அடைப்புகள் நீக்கப்பட்டுள்ளன.

### பாதுகாப்பு மையங்கள்

மாநிலத்தில் உள்ள தாழ்வான மற்றும் பாதிப்பு உள்ளாகும் இடங்களில் வசிக்கும் மக்களை பாதுகாக்கும் பொருட்டு 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் தயார் நிலையில் உள்ளன. மேலும், பள்ளிகள், கல்லூரிகள், திருமண மண்டபங்கள் மற்றும் சமுதாய கூடங்கள் தயார் நிலையில் உள்ளன.

மேலும், மாவட்டங்களில் 3,915 மரம் அறுக்கும் இயந்திரங்கள், 2897 ஜெ.சி.பி. இயந்திரங்கள், 2115 ஜெனரேட்டர்கள் மற்றும் 483 அதிக திறன் கொண்ட பம்புகள், தேடல் மற்றும் மீட்பு உபகரணங்கள் தயார் நிலையில் உள்ளன. இயற்கை பேரிடர்களின் காரணமாக எழும் சிக்கல்களை தீர்க்கவும், குறிப்பாக

(3–ம் பக்கம் பார்க்க)







# ரூ.100 நாணயத்தை வெளியிட்டார் பிரதமர் மோடி

**புதுடெல்லி, அக்.12–**

**மறைந்த பாரதீய ஜனதா தலைவர் விஜயராஜே நினைவாக ரூ.100 நாணயத்தை இன்று பிரதமர் மோடி வெளியிட்டார்.**

பாரதீய ஜனதா கட்சியின் முன்னோடியான ஜன சங்கத்தை நிறுவிய தலைவர்களில் ஒருவர் விஜயராஜே 1919ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12–ந்தேதி பிறந்தார். 2001–ம் ஆண்டு ஜனவரி மாதம் 25–ந்தேதி மறைந்தார். இன்று விஜயராஜே பிறந்த தினத்தை முன்னிட்டு ரூ.100 நாணயம் வெளியிடப்பட்டது. வீடியோ கான்பரன்சிங்கில் கலந்து கொண்டு பிரதமர் மோடி ரூ.100 நாணயத்தை வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில் விஜயராஜே குடும்பத்தினர் மற்றும் விருந்தினர்கள் பலரும் பல்வேறு பகுதிகளிலிருந்து வீடியோ கான்பரன்சிங் மூலம் கலந்து கொண்டனர்.

# உலகமே எதிர்பார்த்த ஆப்பிள் ஐபோன் – 12 நாளை அறிமுகம்



**வாஷிங்டன், அக்.12–**

**உலகமே எதிர்பார்த்த ஆப்பிள் நிறுவனத்தின் ஐபோன் – 12 நாளை அறிமுகமாகிறது.**

ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15ம் தேதி புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவது ஆப்பிள் நிறுவனத்தின் வழக்கம். ஆனால் இந்த ஆண்டு அந்த தேதியில் எதுவும் அறிமுகப்படுத்தப்படவில்லை. நாளை (13–ந்தேதி) தனது புதிய ஐபோன்– 12ஐ ஆப்பிள் நிறுவனம் அறிமுகப்படுத்துகிறது. 'ஹை ஸ்பீட்' என்ற வாசகத்துடன் இந்த அறிமுக விழா அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடக்கிறது.

ஐபோன் தவிர ஏர் டேக்ஸ் என்ற ப்ளூடுத் ட்ராக்கர், ஹோப் பாட் என்ற ஸ்மார்ட் ஸ்பீக்கர், இயர் ஹெட்போன் போன்றவற்றையும் அறிமுகப்படுத்துகிறது. ஐபோன் 12ல் 4 மாடல்கள் இருக்கும். ஒவ்வொன்றும் 5.4 இன்ச் முதல் 6.7 இன்ச் வரை அளவில் இருக்கும். எல்லாவற்றிலும் 5ஜி வசதி இருக்கும். ஏ–14 சிப் அதிவேகம் தரும். கேமராவும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றின் விலை 699 டாலர் முதல் 1099 டாலர் வரை இருக்கலாம் என தெரிகிறது. இது இந்திய மதிப்பில் ரூ.52 ஆயிரம் முதல் ரூ.82 ஆயிரம் வரை விலையில் இருக்கும்.

ஸ்மார்ட் ஸ்பீக்கர் விலை 99 டாலர் வரை வரலாம். மினி ஹோம் பாட் சைஸ் இப்போது உள்ள ஸ்பீக்கரில் பாதிதான் இருக்கும். ஏர்டேக் கருவியை மணிபர்ஸ் சாவி என எதில் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். அவை தொலைந்தால் உடனே கண்டுபிடிக்க உதவும். ஆப்பிள் டி.வி.யும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட ஆப்பிள் டிவி 4கே வசதியுடன் 179 டாலர் விலையில் துவங்கும்.

## சென்னை, காஞ்சீபுரம், திருநெல்வேலி உட்பட 9 மாவட்டங்களில் 14 தொழில் நிறுவனங்கள்

# ரூ.10,055 கோடி முதலீடு: எடப்பாடி முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்து

## 7 ஆயிரம் பேருக்கு புதிய வேலை வாய்ப்பு

## 7 மாதங்களில் 56 நிறுவனங்களுடன் ரூ.41,519 கோடி ஒப்பந்தம் செய்து சாதனை

**சென்னை, அக்.12–**

**14 தொழில் நிறுவனங்கள் ரூ.10 ஆயிரத்து 55 கோடி முதலீட்டில் புதிய தொழில்களை துவங்க இன்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.**

இதன் மூலம் 7 ஆயிரம் பேருக்கு புதிய வேலை வாய்ப்பு உருவாகும்.

ஏற்கனவே 6 மாத காலத்தில் (கொரோனா காலத்தில்) 31 ஆயிரத்து 464 கோடி ரூபாய் அளவுக்கு 42 தொழில் முதலீட்டு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. இன்று கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தை சேர்த்து மொத்தம் 56 தொழில் நிறுவனங்கள் 41 ஆயிரத்து 519 கோடி அளவுக்கு தொழில் முதலீடு செய்ய ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

இதுதொடர்பாக அரசு இன்று வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் இன்று (12–ந்தேதி) தலைமைச் செயலகத்தில், தொழில்துறை சார்பில், சென்னை, காஞ்சிபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, ராமநாதபுரம், திருப்பூர், திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் 14 தொழில் நிறுவனங்கள் தங்கள் புதிய முதலீட்டுத் திட்டங்களை 10,055 கோடி ரூபாய் முதலீட்டில் துவங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இத்திட்டங்களின் மூலம், சுமார் 7 ஆயிரம் நபர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகள் உருவாகும்.

### கொரோனா காலத்திலும்...

உலகத்தையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக, உலக பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டு, படிப்படியாக மீண்டெழுந்து வரும் இந்த இக்கட்டான சூழ்நிலையில், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை தொடர்ந்து மேம்படுத்திடவும், தொழில்துறையில் தொடர்ந்து முன்னணி மாநிலமாக திகழச் செய்திடவும் முதலமைச்சரின் சீரிய வழிகாட்டுதல்களின்படி, தமிழ்நாடு அரசின் தொழில்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. தமிழ்நாடு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் பயனாக,





**முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் இன்று தலைமைச் செயலகத்தில், தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி, ராமநாதபுரம் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில், 6300 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 2,420 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஜெ.எஸ்.டபிள்யூ. ரினுவபிள் எனர்ஜி லிமிடெட் நிறுவனத்தின், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் காணொலிக் காட்சி மூலமாக கையெழுத்தானது.**

இந்த நிதியாண்டின் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான முதல் ஆறு மாதங்களில் இந்திய அளவில் மிக அதிக முதலீடுகளை ஈர்த்த முதன்மை மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. 2020–ம் ஆண்டு செப்டம்பர் வரை, 42 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், 31,464 கோடி ரூபாய் முதலீடுகளுக்கு கையெழுத்திடப்பட்டுள்ளன.

### 14 நிறுவனங்கள்

அதன் தொடர்ச்சியாக, 14 புதிய தொழில் திட்டங்களை, தமிழ்நாட்டில் துவங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று முதலமைச்சர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டன. தற்போது

(3–ம் பக்கம் பார்க்க)

# மன நலமும் சமுதாயக் கடமையும்




கடந்த வார இறுதியில் அக்டோபர் 10 அன்று 'உலக மனநல நாள்' அனுசரிக்கப்பட்டது. இன்றைய கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுத்தி வரும் உலகளாவிய சீரழிவு நம் உடல் நலன் மீது புது அக்கறையை ஏற்படுத்தி வருகிறது. நம் நலன் மட்டுமின்றி அருகாமையில் உள்ளவர்களின் நலனும் நன்றாக இருக்கவேண்டும் என்ற கண்ணோட்டம் ஏற்பட்டு வருகிறது.

உடல் நலத்துடன் உள்ளத்தின் நலன் மீதும் அக்கறை செலுத்த வேண்டும் என்பதற்காகவே உலக மனநல நாள் அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

பொதுவாகவே நாம் மனநலத்தையும் மனநோயையும் ஒன்றோடொன்று தொடர்பு படுத்திக்கொள்கிறோம். அதன் விளைவாகவே மனநலம் தொடர்பாகப் பேசத் தயங்குகிறோம். நான் மனநலத்துடன் இல்லை அல்லது எனது மனம் ஆரோக்கியமாக இல்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள மறுப்பதற்குக் காரணம், அது மனநோய் என்று உருவகப்படுத்தப்படுமோ என்ற பயம் தான். அதனால்தான், மனநலம் என்ற வார்த்தையின் மீதே நமக்கு ஒருவித பயம் ஏற்பட்டுவிடுகிறது.

மனநலப் பிரச்சினைகளை நமக்குள்ளே ரகசியமாய் வைத்துக்கொள்கிறோம்; அதற்கான உதவிகள் கேட்பதைக்கூடப் பலவீனமாய் நினைத்துக்கொள்கிறோம்.

தனிப்பட்ட ஒருவர் தனது மனநலத்தை அவரே சீர் செய்து கொள்ளவேண்டும் என்பது தவறான எண்ணமாகும். அவரே தன்னைப் பற்றி முழுமையாக புரிந்து கொள்ளாத நிலையில் தடுமாறி கொண்டிருக்கும் நிலையில் உடன் இருப்பவர்கள், அருகாமையில் இருப்பவர்கள் தான் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியாக வேண்டும்.

ஆனால் மனநலம் பாதிக்கப்பட்ட, பாதிப்படைந்த நபரை சமுதாயம் உரிய வகையில் பார்க்க தவறும்போது தான் பல்வேறு அசம்பாவிதங்களுக்கு காரணமாக இருக்கிறது. சில வாரங்களுக்கு முன்பு கூட உத்தரபிரதேசத்தில் மனநலம் பாதிப்படைந்த ஒரு இளம்பெண்ணுக்கு ஏற்பட்ட பாலியல் வன்கொடுமை நாட்டையே அதிர்ச்சி அடைய செய்தது.

ஆனால் இதுபோன்ற நிகழ்வுகள் நாடெங்கும் தொடர்ந்து அரங்கேறிக்கொண்டே தான் இருக்கிறது. சென்னை உட்பட பல பெரிய நகரங்களில் இப்படி மனநலன் பாதிப்படைந்த சிறுமிகளுக்கு ஏற்படும் சங்கடத்தை சமுதாயம் தனது சங்கடமாக கருதாமல் தள்ளி நின்று வேடிக்கை பார்ப்பதை இனியும் தொடரக்கூடாது.

மனநலனே சமுதாயத்தின் நலன் என்பதை ஆணித்தரமாக அனைவரும் ஏற்றாக வேண்டும். சாலையில் தப்பாக வண்டி ஓட்டுபவரை கோபத்தில் திட்டிவிட்டு சென்று விடுவதால் எந்த நன்மையும் அறவே கிடையாது. ஆனால் நல்ல முன்உதாரணமாக இருப்பது எப்படி? என்பதை தெரிந்து கொண்டு செயல்பட்டால் தானே சமுதாயமே மகிழ்ச்சியாக, சிறப்பாக செயல்படும்!

உலகெங்கும் பத்து பேரில் ஒருவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று உலக சுகாதார அமைப்பின் ஆய்வு சுட்டிக்காட்டுகிறது. அதாவது கொரோனா பெருந்தொற்றை விட மிக அபாயகரமான ஆரோக்கிய சீர்கேடு மனநல பிரச்சினைகளாக இருக்கிறது. குடிகாரனாக மாறுவதும் 40 நொடிகளுக்கு ஒரு தற்கொலை நடப்பதும் மனநல சீர்கேடுகளால் தானாகும்.

ஆனால் உலகெங்கும் மனநல மருத்துவரின் சதவிகிதம் ஒரு லட்சம் பேருக்கு ஒருவர் என்றே இருக்கிறது.

கொரோனா தொற்று காரணமாகவும் பல்வேறு குடும்ப சிக்கல்கள் உருவாகி வருவதாலும் மனநலப் பாதிப்புகள் அதிகரித்து வருகிறது.

ஆக, மனநல மருத்துவ வளர்ச்சிகள், அவர்களிடம் ஆலோசனை பெற்று, தேவையற்ற பயங்கள் நீங்கினால் தான் மனநல பிரச்சினை தீரும்.

நல்ல ஆரோக்கியமான மனநலம் கொண்டவர் தான் மனநல சிக்கல்களை தீர்த்து வைக்கக்கூடிய சக்தி பெற்றவர்கள் என்பதை உணர்ந்து பொறுப்புடன் செயல்பட உறுதி ஏற்போம்.



# 5 விக்கெட் வித்தியாசத்தில் டெல்லியை வீழ்த்தி மீண்டும் முதலிடம் வந்தது மும்பை


*அபுதாபி, அக். 12–*

*ஐ.பி.எல். டி20 கிரிக்கெட் போட்டியில் 5 விக்கெட் வித்தியாசத்தில் டெல்லி கேபிட்டல்ஸ் அணியை வீழ்த்தி புள்ளி பட்டியலில் மும்பை மீண்டும் முதலிடத்துக்கு வந்தது.*

*13வது ஐ.பி.எல். டி20 கிரிக்கெட்டி போட்டியின் 27வது லீக் அட்டம் அபுதாபியில் நேற்றிரவு நடைபெற்றது. இதில் சாம்பியன் மும்பை இந்தியன்ஸ் அணி, டெல்லி கேப்பிட்டல்சை எதிர்கொண்டது. டாஸ் வென்ற டெல்லி அணி முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. தொடக்க ஆட்டக்கார களம் இறங்கிய பிரித்வி ஷா 4 ரன்களில் முதல் ஓவரிலேயே அவட்டானார். அடுத்த வந்த ரஹானே 15 ரன்னிலும், கேப்டன் ஸ்ரேயாஸ் அய்யர் 42 ரன்னிலும், ஸ்டோனிஸ் 13 ரன்னிலும் அவுட்டானார்கள். மற்றொரு தொடக்க வீரர் ஷிகர் தவான் நிதனமாக விளையாடி அரைசதத்தை கடந்தார். 20 ஓவர் முடிவில் டெல்லி அணி 4 விக்கெட் இழப்புக்கு 162 ரன்கள் சேர்த்தது. ஷிகர் தவான் 69 ரன்களுடனும் (52 பந்து, 6 பவுண்டரி, ஒரு சிக்சர்), அலெக்ஸ் கேரி 14 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.*

*163 ரன்கள் இலக்குடன் களம் இறங்கிய மும்பை அணியின் தொடக்க ஆட்டக்காரரான கேப்டன் ரோகித் சர்மா 5 ரன்னில் அவுட்டானார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் குயின்டான் டி காக்கும், சூர்யகுமார் யாதவும் அதிரடி ஆட்டங்களை தொடங்கினர். டி காக் 53 ரன்களில் (36 பந்து, 4 பவுண்டரி, 3 சிக்சர்) அவுட்டானார். சூர்யகுமார் யாதவ் 53 ரன்களிலும், (32 பந்து, 6 பவுண்டரி, ஒரு சிக்சர்) ஹர்திக் பாண்ட்யா ரன் எடுக்காமலும், இஷான் கிஷன் 28 ரன்னிலும் அவுட்டானார்கள். மும்பை அணி 19.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 166 ரன்கள் குவித்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. பொல்லார்ட் (11 ரன்), குருணால் பாண்ட்யா (12 ரன்) அவுட் ஆகாமல் நின்றனர்.*

*7வது ஆட்டத்தில் ஆடிய மும்பை அணிக்கு இது 5வது வெற்றியாகும். இதன் மூலம் 10 புள்ளிகளுடன் பட்டியலில் மீண்டும் முதலிடத்திற்கு வந்தது. இதுவரை புள்ளி பட்டியலில் முதலிடம் இருந்த டெல்லி அணி இரண்டாவது இடத்திற்கு சென்றது.*




## இன்றைய போட்டி

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியின் 28ஆவது லீக் ஆட்டம் சார்ஜாவில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறுகிறது. இதில் தினேஷ் கார்த்தி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், விராட் கோலி தலைமையிலான ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் மோதுகின்றன.

## ஐ.பி.எல். புள்ளி விபர பட்டியல்

| அணிகள் | ஆட்டம் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | ரன்ரேட் |
|---|---|---|---|---|---|
| 1. மும்பை இந்தியன்ஸ் | 7 | 5 | 2 | 10 | + 1.327 |
| 2. டெல்லி கேபிட்டல்ஸ் | 7 | 5 | 2 | 10 | + 1.038 |
| 3. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 6 | 4 | 2 | 8 | +0.017 |
| 4. ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் | 6 | 4 | 2 | 8 | – 0.820 |
| 5. சன் ரைசர்ஸ் ஐதராபாத் | 7 | 3 | 4 | 6 | + 0.153 |
| 6. ராஜஸ்தான் ராயல்ஸ் | 7 | 3 | 4 | 6 | –0.872 |
| 7. சென்னை சூப்பர் கிங்ஸ் | 7 | 2 | 5 | 4 | – 0.588 |
| 8. கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 7 | 1 | 6 | 2 | – 0.381 |

## ராகுல் திவேதியா, ரியான் பராக் அதிரடி ஆட்டம்

# ஐதராபாத் அணியை வீழ்த்தி ராஜஸ்தான் திரீல் வெற்றி

*துபாய், அக். 12–*

*துபாயில் நேற்று நடைபெற்ற ஐ.பி.எல். டி20 போட்டியில் ராகுல் திவேதியா, ரியான் பராக் அதிரடி ஆட்டத்தால் ஐதராபாத் அணியை வீழ்த்தி ராஜஸ்தான் திரீல் வெற்றி பெற்றது.*

*13வது ஐ.பி.எல். டி20 கிரிக்கெட் போட்டியின் 26வது லீக் ஆட்டம் துபாயில் நேற்று நடைபெற்றது. இதில் ஐதராபாத் சன்ரைசர்சும், ராஜஸ்தான் ராயல்சும் மோதின. டாஸ் வென்ற ஐதராபாத் அணி பேட்டிங்கை தேர்வு செய்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கிய வார்னர், பேர்ஸ்டோ ஜோடி வழக்கம் போல் அதிரடி ஆட்டத்தை தொடங்கினர். ஆனால் பேர்ஸ்டோ 16 ரன்களில் தியாகி பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மணிஷ் பாண்டே, வார்னர் கூட்டணி நிதானமாக ஆடினர். வார்னர் 48 ரன்களில் அவுட்டானார். அடுத்து வந்த வில்லியம்ஸன், பாண்டேவுடன் சேர்ந்து ஆடினார். மணிஷ் பாண்டே 40 பந்துகளில் அரை சதம் அடித்து 58 ரன்களில் (2 பவுண்டரி, 3 சிக்ஸர்) உனத்கத் பந்துவீச்சில் அவுட்டானார். சன்ரைசர்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 158*



*ரன்கள் சேர்த்தது. வில்லியம்ஸன் 22 ரன்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். கர்க் கடைசி பந்தில் 15 ரன்களில் ரன் அவுட் ஆனார்.*

*159 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய ராஜஸ்தானியின் தொடக்க ஆட்டக்காரர் பென் ஸ்டோக்ஸ் 5 ரன்னில் கலீல் அகமதுவின் வேகப்பந்து வீச்சில் போல்டு ஆனார். அடுத்து வந்த கேப்டன் ஸ்டீவன் சுமித் (5 ரன்னிலும், ஜோஸ் பட்லர் 16 ரன்னிலும் அவுட்டாகி 26 ரன்னுக்குள் 3 விக்கெட்டுகளை இழந்தனர். இதன் பின்னர் வந்த உத்தப்பா 18 ரன்னிலும், சஞ்சு சாம்சன் 26 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். ராஜஸ்தான் அணி 12 ஓவர்களில் 78 ரன்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்திருந்தது. இதனால் ஐதராபாத் அணிக்கு வெற்றி நிச்சயம் என்பது போல் தோன்றியது.*

*இந்த சூழலில் களம் இறங்கிய ராகுல் திவேதியாவும், ரியான் பராக்கும் இணைந்து தங்களது அதிரடி ஆட்டத்தின் மூலம் அணியை வெற்றி பாதைக்கு அழைத்து சென்றனர். 18வது ஓவர் வீசிய ரஷித்கான் பந்துகளை திவேதியா நான்கு திசைகளுக்கும் அடித்து ரன்களை குவித்தார். கடைசி ஓவரில் ராஜஸ்தானின் வெற்றிக்கு 8 ரன் தேவைப்பட்டது. பரபரப்பான 20வது ஓவரை வேகப்பந்து வீச்சாளர் கலீல் அகமது வீசினார். இதில் முதல் 4 பந்துகளில் 6 ரன் எடுத்தனர். 5வது பந்தை ரியான் பராக் சிக்சருக்கு அடித்து ராஜஸ்தான் அணி திரீல் வெற்றி பெற்றது.*

*ராகுல் திவேதியா 45 ரன்களுடனும் (28 பந்து, 4 பவுண்டரி, 2 சிக்சர்), ரியான் பராக் 42 ரன்னுடனும் (26 பந்து, 2 பவுண்டரி, 2 சிக்சர்) அவுட் ஆகாமல் இருந்தனர். 7வது லீக்கில் ஆடிய ராஜஸ்தானுக்கு இது 3வது வெற்றியாகும். ஐதராபாத் அணிக்கு 4வது தோல்வியாகும்.*

**சிறுகதை**

## சகோதரத்துவம்

தருமபுரி **சி.சுரேஷ்**

மணி அண்ணன் கடையில் டீ சாப்பிடுவது அலாதியான இன்பம் அவர் பாலில் அதிகம் தண்ணீர் சேர்க்க மாட்டார்.

அவர் டீ கடையில் கூட்டம் எப்பொழுதும் குவிந்து கொண்டிருக்கிருக்கும்.

யார் யாருக்கு என்ன டேஸ்ட்ல டீ போடனும்ன்றது அவருக்கு அத்துப்படி கை வந்த கலை.

அது மட்டுமல்ல தொடர்ந்து மணி அண்ணன் கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் வேறு எங்கேயும் டீ அருந்தச் செல்லமாட்டார்கள்.

அதுவும் சாயங்காலத்தில் டீக் கடையில் சூடாக போடப்படும் பஜ்ஜியும் வடையும் சூடான டீக்கு ஏத்த ஜோடியாய் இருக்கும்.

நண்பர்கள் எல்லோரும் ஒரு கூட்டு பறவைகள் போல ஒன்று கூடும் இடம் அந்த டீக்கடைதான்.

டீக்கடையில் காலை,மாலை என எல்லா நியூஸ் பேப்பர்களும் வரும். சூடான அரசியல்,சினிமா செய்திகள் வாசிக்க சரியான இடம்.

கொரோனா வைரஸ்ஸாகிய இந்நாட்களில் மூடப்பட்ட நிலையில் டீக்கடை இருந்தது. அந்த இடத்தைவிட்டு மனோகரனாகிய என்னால் டூவீலரில் கடக்க இயலவில்லை.

மணி அண்ணனை பார்த்து எத்தனை நாளாயிற்று அவரோடு பேசவாவது செய்யலாம்.

ஒரு மரத்தடியில் நிழல் தேடி வண்டியை மனோகரன் நிறுத்தினான். பாக்கெட்டில் இருந்து மொபைலை எடுத்து மணிக்கு கால் பண்ணினேன்

"அண்ணே நான்தான் மனோகரன் பேசறேன். எப்படி இருக்கீங்க ரொம்ப நாளாச்சு அதான்"

"மனோ உங்கள எல்லாம் பாக்காம ரொம்ப போரடிக்குது. கடைப்பக்கம் வரமுடியாமல் கையெல்லாம் கட்டிப் போட்ட மாதிரி இருக்கு"

"ஆமா அண்ணே எனக்கும் ஒரு மாதிரி இருந்துச்சு. அதனால தான் உங்களுக்கு போன் பண்ணி விசாரிக்கலாம்ன்னு தோணுச்சு"

"ஒரே சலிப்பா இருக்கு மனோ. கடையை வைத்து தானே குடும்பத்தை ஓட்ட வேண்டியதா இருக்கு. வேற எந்த வருமானமும் இல்லை"

"நீங்க சொல்றது உண்மைதான். கஷ்டம்தான் அண்ணே"

வோர்ல்ட் ஹெல்த் ஆர்கனிசேஷன் ஜனவரி மாதத்திலிருந்து எச்சரித்தது கொரோனா வைரஸ் குறித்து நாம கண்டுக்காம விட்டுட்டோம். மார்ச் மாதத்தில் திடீர்னு ஊரடங்கு உத்தரவு கடைகளை எல்லாம் மூடுங்கன்னு சொல்லிட்டாங்க. என்ன பண்றது உயிருக்குப் பயந்து எல்லாரும் வீட்ல உட்கார்ந்துட்டு இருக்கோம். இப்ப என்னைய மாதிரி அன்னாட வருமானக்காரங்க என்ன செய்வாங்க. யோசிச்சு பாரு. கொஞ்சம் முன்னாடியே நம்ம அரசாங்கம் விழிப்புணர்வு கொடுத்திருந்தால் இவ்வளவு சிரமப்பட வேண்டியதில்லையே"

"ஆமா நீங்க சொல்றது உண்மைதான். யாரும் இவ்வளவு சீரியஸா ஆகும்னு யோசிக்கலை"

"இல்ல தம்பி வரும் முன் காப்போம்; அப்படின்றது நாம சும்மா எடுத்துக்க கூடாது. ஒவ்வொரு உயிரும் ரொம்ப முக்கியம். நம்ம கதையே அல்லல்ல ஆடுது"

"இல்ல அண்ணே முக்கியமான பொறுப்பில் இருக்கிறவங்களுடைய அலட்சியம்தான் அநேகருடைய வாழ்க்கையில் சிரமத்தை கொண்டு வருது"

"அது உனக்கு புரியுது தம்பி. புரிய வேண்டியவங்களுக்கு புரிய மாட்டேங்குது"

"ஆமா அண்ணே சரியாச் சொன்னீங்க. "

"ஆமா தம்பி உன்ன நெனச்சாதான் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு"

"எத்தனையோ பேர் வராங்க டீ சாப்பிடுறாங்க; நலம் விசாரிக்கிறார்கள் . ஆனா இந்த மாதிரி நேரத்துல உன்ன மாதிரி ஒரு சிலர் மட்டும்தான் மறக்காம நலம் விசாரிக்கிறீங்க"

"அண்ணே சாப்பிட்டிங்களா உங்களுக்கு ஏதாவது உதவி வேணுமா?"

"தம்பி இது வரைக்கும் கடவுள் எந்த குறையும் வைக்கல. எப்படியும் ரேஷனில் 500 ரூபா பொருட்கள் வாங்கிடலாம்.

அரிசி பருப்பு எல்லாம் ஓரளவுக்கு வீட்டில் இருக்கு"

"அண்ணா தப்பா நினைச்சுக்காதீங்க; கேட்கணும்னு மனசுல தோணுச்சு; அதான் விசாரிச்சேன்"

ஐயோ அப்படி எல்லாம் நான் நினைக்கலப்பா. இது மாதிரி நேரத்துல அவங்கவங்க வீட்டில தங்களைப்பத்தி மட்டும்தான் யோசிச்சிட்டு இருப்பாங்க. ஆனா நீ பழகின தோஷத்துக்கு அண்ணன பத்தி யோசிக்கிற. அத நினைச்சா எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்குப்பா"

"சரிங்க அண்ணே வெச்சுடறேன்"

பிறகு ஒரு மணி நேரம் கழித்து ஒருவர் "சார் இது டீக்கடை மணி அண்ணன் வீடா"

"ஆமாப்பா"

சத்தம் கேட்டு மணி வெளியே வர

"சார் நீங்கதானே மணி"

"ஆமாப்பா அதுக்கு என்ன"

"இல்ல சார் உங்களுக்கு ஒரு மூட்டை அரிசி பருப்பு வீட்டுக்கு தேவையான சமையல் பொருள்கள் எல்லாம் ஒருத்தர் வாங்கி கொடுத்தாரு. நான் கண்ணன் ஸ்டோரில் டெலிவரி பாயாக வேலை செய்கிறேன். உங்க அட்ரஸ் கொடுத்து உங்க வீட்ல சேர்க்கச் சொன்னார்"

யாராக இருக்கும் குழப்பமாக இருந்தார்.

யாரிடம் கேட்பது தயக்கமாய் இருந்தது.

வாங்க மறுத்தார்.

ஐந்து நிமிடம் கழித்து மீண்டும் மணிக்கு போன் கால் வந்தது

"மணி அண்ணா... நான்தான் மனோகரன் பேசுறேன்"

"சொல்லு மனோ"

"அண்ணா தப்பா நினைச்சுக்காதீங்க. நீங்க இலவசமா யார் கொடுத்தாலும் வாங்க மாட்டீங்கன்னு எனக்கு தெரியும். தயவு செஞ்சு உங்க கூட பிறந்த தம்பியா என்னைய நினைச்சு நான் உங்களுக்கு கொடுத்து அனுப்பினத வாங்கிக்கோங்க" என்றேன்.

மணியால் மறுத்துப் பேச இயலவில்லை.

கன்னங்களில் நேசக் கண்ணீரின் கோடுகள்

"சரி மணி இனிமே அண்ணன் கடைக்கு டீ சாப்பிட வரும் போது அண்ணன் உங்கிட்ட டீக்கு காசு வாங்க மாட்டேன் சரியா"

"சரி அண்ணே"

சந்தோஷத்தோடு மணி எல்லா பொருட்களையும் வாங்கிக் கொண்டார்.

மணி மனதுக்குள் சொல்லிக்கொண்டார். கூட பிறந்தால்தான் உறவுகளா இந்த உறவை என்ன சொல்வது? தாய்கள், தகப்பன்கள் வேறாக இருந்தாலும் சகோதரத்துவம் ஒன்றாகவே இருக்கிறது.

## ராம் மனோகர் லோகியா

(பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர்
டாக்டர். ராம் மனோகர் லோகியா நினைவு நாள்)

பொதுவுடமைத் தத்துவத்தை
இந்தியர்க்கு ஏற்றபடி
மாற்றி அமைத்தவர்!

''வெள்ளையனே வெளியேறு!''
இயக்கம் உட்பட விடுதலைப்
போராட்டங்களில் பங்கேற்றவர்!

இந்தியப் பொதுவுடமை
அரசியல் வாதிகளின் ஆசான்!

பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின்
பொதுச் செயலாளர்!

பெர்லின் பல்கலைக் கழகத்தில்
டாக்டர் பட்டம் பெற்றவர்

பொது வாழ்க்கைக்காக
இல்வாழ்க்கையில் ஈடுபடாதவர்!

சைமன் கமிஷனை
எதிர்த்தவர்!

காங்கிரஸிலிருந்து
காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி
உண்டாக்கியவர்!

வெளி விவகாரத் துறையின்
முதல் தலைவராக
நேருஜியால் நியமிக்கப்பட்டவர்!
இந்தியாவின் வெளியுறவுக்
கொள்கைகளை வகுத்தவர்!
விடுதலை வேட்கையின்
எழுத்தாலும் பேச்சாலும்
செய்கையாலும் பன்முறை
சிறைவாசம் அனுபவித்தவர்!

சுதந்திரப் போர் செய்திகளை
ரகசிய வானொலி மூலம்
மக்களுக்கு தெரிவித்தவர்!


'பணியாரி நதியின் குறுக்கே
மக்களை ஒன்று சேர்த்து
அணையைக் கட்டியவர்!

இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு
அகிம்சை வழியில் போராடியவர்!

''இவரைப் போல
துணிவும் எளிமையும் கொண்ட
மனிதரை நான் கண்டதில்லை!''
என்று
மகாத்மாவால் புகழப்பட்டவர்!

அவரே
மக்கள் பணிக்காகத்
தன்னையே அர்ப்பணித்த
டாக்டர் ராம் மனோகர் லோகியா ஒரு
அதிசய மனிதர் மட்டுமல்ல;
அற்புதமான மனிதரும் கூட!

கவிஞர் எஸ்.ராமகிருஷ்ணன்
(சிறுமுகை)




## நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும் உணவுப்பொருள்கள் எவை எவை?

*நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருந்தால் காற்றில் சுற்றித் திரியும் நோய் கிருமிகள் சுலபமாக நம்மை தாக்கும்.*

*நோய் எதிர்ப்பு சக்தியை வலிமையாக்கினால் அது கிருமித்தொற்று, வைரஸ்களோடு போராடி நமது உடலைப் பாதுகாக்கும். இதற்காக பெரிதாக மெனக்கெட வேண்டாம். அன்றாடம் உண்ணும் உணவில் சரியாக கவனம் செலுத்தினாலே போதும்.*

*மிளகு , மஞ்சள், வேப்பிலை, பூண்டு, கீரை, இஞ்சி, தேன் ஆகியவை நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவும் தமிழ்மக்களின் பாரம்பரிய உணவுப் பொருள்கள்.*


*பிரோக்கோலி, பெல் பெப்பர்ஸ், கேரட், ஓட்மீல் ஆகியவை வெளிநாடுகளில் இருந்து வந்து நமது உணவுப்பழக்கத்தில் சேர்ந்துள்ள உணவுப்பொருள்.*

*கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி வரும் ஒரு நேரத்தில், அதிக நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் உணவுகளை உட்கொள்வது மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை இணைத்துக்கொள்வது அவசியம்.*

*நாம் காலை உணவு உட்கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், அவை தான் நமது உடலுக்கு முழு சக்தியை வழங்குவதுடன், முழு ஆரோக்கியமாக இருக்கவும் உதவுகிறது.*

*வைட்டமின் Cக்கு அடுத்தபடியாக வைட்டமின் E தான் உடலுக்கு முக்கிய ஊட்டச்சத்து. இது மர உணவுகளில் உள்ள ஊட்டச்சத்துகளை உறிஞ்சி உடலுக்கு அளிக்கும். இந்த வைட்டமின் E பாதாமில் அதிகம் உள்ளதால் தினமும் 5 சாப்பிடலாம். சூரிய காந்தி விதையில் வைட்டமின் B6 , மெக்னீசியம்,*

*பாஸ்பரஸ், வைட்டமின் E என ஆற்றல் மிகுந்த ஆண்டி ஆக்ஸிடண்ட் அதிகமாக உள்ளது.*




## மூளையை அழிக்கும் அரியவகை ஆட்கொல்லி அமீபா தொற்று கண்டுபிடிப்பு

*அமெரிக்காவில் புளோரிடாவில் ஒரு அரிய வகை மூளையை அழிக்கும் அமீபா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.*

*புளோரிடா சுகாதாரத் துறை 'நெக்லீரியா ஃபோலெரி' என்ற மூளையை அழிக்கக்கூடிய ஒரு செல் உயிரினமான அமீபா தொற்று இது என்று தெரிவித்துள்ளது. இது பொதுவாகவே மிகவும் ஆபத்தானது .*

*இதுவரை 143 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் நான்கு பேர் மட்டுமே பிழைத்துள்ளனர்.*

*ஏரிகள், ஆறுகள் மற்றும் குளங்கள் போன்ற வெதுவெதுப்பான நன்னீரில் இந்த நெக்லீரியா ஃபோலெரி பொதுவாக காணப்படுகிறது. அந்த நன்னீர் நிலைகளில் நீந்தச் செல்லும் பொதுமக்கள் இந்த அமீபா தொற்றுக்கு ஆளாகும் சாத்தியக் கூறுகள் இருக்கிறது.*

*அங்கு குளிப்பவர் நீந்தும் போது "அமீபா நாசி குழல் வழியாக நுழைகிறது. எனவே மூக்கில் தண்ணீர் நுழையாமல் தவிர்ப்பதன் மூலம் மனிதர்களுக்கு ஏற்படும் இந்த மோசமான உடல்நல பாதிப்பைத் தடுக்க முடியும்" என்று சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.*

*அதிக நீர் வெப்பநிலை நிலவும் காலங்களில் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் ஆழமற்ற நீர்நிலைகளில் உள்ள வெந்நீர் மற்றும் நன்னீர் நிலைகளைத் தவிர்க்க சுகாதாரத்துறை பரிந்துரைத்துள்ளது.*

*சூடான நன்னீரில் நீந்தும்போது மூக்கை மூடிக் கொள்ள வேண்டும். சைனஸ் போன்ற மூக்கடைப்பு பிரச்சனைகளின் போது உபயோகப்படுத்தும் மூக்கு சுத்தம் செய்யும் சாதனங்கள் மூலமும் அமீபா தொற்றுக்கு உள்ளாக நேரிடும் என்றும் சுகாதாரத் துறை எச்சரித்துள்ளது.*

*"அவ்வகையான மூக்கு சுத்தப்படுத்தும் சாதனங்களுக்கு காய்ச்சி ஆற வைத்த, சுத்திகரிக்கப்பட்ட காய்ச்சி வடிகட்டிய நீரை மட்டுமே பயன்படுத்துங்கள்" என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

## 90 சதவிகித தளர்வு அறிவிக்கப்பட்ட பின்னரும்

# கொரோனா தொற்று கட்டுக்குள் உள்ளது: எடப்பாடி தகவல்

சென்னை, அக்.12–

**தமிழ்நாட்டில் கொரோனா தொற்று கட்டுக்குள் உள்ளது என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி கூறினார்.**

சென்னையில் இன்று வடகிழக்கு பருவமழை முன்எச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர்கள், அதிகாரிகளுடன் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது:–

கனமழை பெய்தாலும் உபரி நீர் மழைநீர் வடிகால் வழியாக தேங்காமல் செல்ல மக்களுக்கு பாதிப்பு இல்லாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. மீனவர்கள் கடலுக்கு செல்லும் போது முன் எச்சரிக்கை நடவடிக்கையாக தகவல் தொழில்நுட்ப கருவி மூலம் தகவல் தெரிவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எல்லா வகையிலும் வடகிழக்கு பருவமழையை சமாளிக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மக்கள் முழு ஒத்துழைப்பு தரவேண்டும்.

இது சோதனையான நேரம். மக்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். ஏற்கனவே அறிவிபத்தபடி அனைவரும் சமூக இடைவெளியை கடைப்பிடிக்கவேண்டும். முககவசம் கண்டிப்பாக அணியவேண்டும். வீட்டுக்கு சென்றதும் சோப்பு போட்டு கைகளை நன்றாக கழுவவேண்டும். வீட்டை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

கொரோனாவை பொறுத்தவரை பிற மாநிலங்களை ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் படிப்படியாக கொரோனா குறைக்கப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் அதிகமாக இருந்தது. அரசு எடுத்த நடவடிக்கை காரணமாக மேற்கொண்ட அதிக அளவிலான பரிசோதனை காரணமாக கொரோனா தொற்று குறைந்துள்ளது.

**குறைந்தது**

90 சதவிகித தளர்வு ஏற்படுத்திய பின்னரும் கொரோனா தொற்று கட்டுக்குள் உள்ளது. அருள்கூர்ந்து மக்கள் அரசு அறிவித்துள்ள வழிமுறைகளை பின்பற்றி அரசு வழிகாட்டு முறைகளை பின்பற்றி அரசுக்கு முழு ஒத்துழைப்பு தரவேண்டும். கொரோனாவுக்கு இன்னும் மருந்து இல்லை. எனவே மக்கள் தங்களை கட்டுப்படுத்தி கொள்ளவேண்டும். கொரோனா தொற்று எளிதாக பரவும். எனவே மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் இன்று தலைமைச் செயலகத்தில், தொழில்துறை சார்பில், காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் ஹிரானந்தனி குழுமத்தைச் சேர்ந்த கிரீன்பேஸ் இன்டஸ்ட்ரியில் பார்க்ஸ் நிறுவனம் 750 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 500 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் இன்டஸ்ட்ரியல் லாஜிஸ்டிக்ஸ் பார்க் அமைத்திடும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

## கொரோனா தடுப்பு மற்றும் மாவட்ட வளர்ச்சி பணிகள்

# தூத்துக்குடி மாவட்டத்தில் எடப்பாடி நாளை ஆய்வு

சென்னை, அக்.12–

**தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா தடுப்பு பணிகள் மற்றும் மாவட்ட வளர்ச்சி பணிகள் குறித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி நாளை ஆய்வு நடத்துகிறார்.**

நாளை மறுநாள் (14–ந் தேதி) கன்னியாகுமரி, விருதுநகர் மாவட்டங்களில் முதல்வர் ஆய்வு செய்கிறார்.

மாவட்டந்தோறும் சென்று கொரோனா தடுப்பு பணிகள் மற்றும் மாவட்ட வளர்ச்சி பணிகள் குறித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆய்வு செய்து வருகிறார்.

மதுரை, கோவை, சேலம், கிருஷ்ணகிரி, திருச்சி, திருவள்ளூர், காஞ்சிபுரம் என இதுவரை 24 மாவட்டங்களில் முதலமைச்சர் ஆய்வு செய்துள்ளார். ஒவ்வொரு மாவட்டத்திலும் அங்கு சிறு, குறு, நடுத்தர தொழில் கூட்டமைப்பினர், விவசாய பிரதிநிதிகள், மகளிர் சுயஉதவிக்குழுவினரை சந்தித்து குறைகளை கேட்டு அறிவிப்புகளை செய்து வருகிறார்.

இந்த நிலையில் நாளை தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறும் ஆய்வு கூட்டத்தில் முதலமைச்சர் கலந்து கொள்கிறார்.

இதற்காக நாளை காலை சென்னையில் இருந்து விமானம் மூலம் தூத்துக்குடிக்கு காலை 10.15 மணிக்கு செல்கிறார். அங்கிருந்து நேராக தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் அலுவலகத்துக்கு செல்கிறார். அங்கு அமைச்சர், கலெக்டர், அதிகாரிகளுடன் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட வளர்ச்சி பணிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்கிறார்.

விவசாய பிரதிநிதிகள், மகளிர் சுயஉதவி குழுவினர், சிறு, குறு, நடுத்தர தொழில் கூட்டமைப்பினரை தனித்தனியாக சந்தித்து குறைகளை கேட்கிறார்.

பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். முடிவுற்ற திட்டங்களை துவக்கி வைக்கிறார். ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் வழங்குகிறார்.

இதன் பின் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்திக்கிறார்.

தூத்துக்குடி மாவட்டத்துக்கு ஏராளமான புதிய திட்டங்களை முதலமைச்சர் அறிவிக்க உள்ளார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை அமைச்சரும், தூத்துக்குடி மாவட்ட செயலாளருமான கடம்பூர் ராஜூ செய்து வருகிறார்.

நாளை தூத்துக்குடியில் நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு நேராக கன்னியாகுமரி செல்கிறார். கன்னியாகுமரியில் நாளை இரவு தங்கும் முதலமைச்சர் நாளை மறுநாள் (14–ந் தேதி) காலை கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்திலும், அன்று மாலை விருதுநகர் மாவட்டத்திலும் ஆய்வு செய்கிறார்.

# மக்களை பாதுகாக்க தயார் நிலையில் அரசு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் தடையில்லா மின்சாரம் வழங்கிடவும், மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து செயல்படவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், கூடுதல் மின்கம்பங்களை இருப்பு வைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**கட்டுப்பாட்டு அறை**

மாநில அவசர கால கட்டுப்பாட்டு மையம் (1070) மற்றும் மாவட்ட அவசர கால கட்டுப்பாட்டு மையம் (1077), TNSMART செயலி மற்றும் சமூக வலைதளம், மின்னணு மற்றும் அச்சு ஊடகங்கள் மூலம் பொதுமக்களுக்கு பேரிடர் குறித்த தகவல்கள் தெரிவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதலமைச்சர் பருவமழை காலத்தில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

★ பேரிடர் காலங்களில் மீட்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகளில் ஈடுபடும் பல்வேறு துறை அலுவலர்களின் செயல் திறன்களை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**முககவசம் கட்டாயம்**

★ பேரிடர் காலங்களில் நடத்தப்படும் மாதிரி பயிற்சிகள், கொரோனா பரவலை தடுக்க சமூக இடைவெளியை பின்பற்றி, 50 பேருக்கு மிகாமல் பயிற்சி அளிக்க வேண்டும்.

★ பேரிடர் காலங்களில் கொரோனா பரவலை தடுக்க, பொதுமக்கள் அனைவரும் வெளியில் செல்லும் போதும், பொது இடத்தில் தங்க வைக்கும் போதும், முகக்கவசம் கட்டாயமாக அணிந்து கொள்ள வேண்டும்.

★ தனிமனித இடைவெளி கடைபிடிக்க வேண்டும். கூட்டம் கூடுதலை தவிர்க்க வேண்டும்.

★ பொதுமக்களுக்கு பேரிடர் காலத்தில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வு கையேடுகள், குறும்படங்கள் மற்றும் ஒலி, ஒளி பதிவுகள் மூலம் விழிப்புணர்வுகள் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

★ ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ள நிவாரண முகாம்கள், சமூக இடைவெளியுடன் தங்க வைக்க போதுமானதாக உள்ளதா என ஆய்வு செய்து, தேவைப்படின் நிவாரண முகாம்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

**விழுந்த மரங்கள் உடனடி அகற்றம்**

★ மழை காலங்களில் கீழே விழும் மரங்களை உடனே அகற்ற தேவையான ஆட்கள் மற்றும் மரம் அறுக்கும் இயந்திரங்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

★ மழை நீர் தேங்கும் இடங்களில் நீரை வெளியேற்ற மின்மோட்டார்கள் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

★ மீட்புக் குழுக்கள் குறுகிய கால அளவில் பாதிக்கப்பட்ட பகுதிகளை சென்றடைய ஏதுவாக தேவையான உபகரணங்களுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

★ வடகிழக்கு பருவ மழையின் காரணமாக வயிற்றுப்போக்கு மற்றும் தொற்று நோய் ஏதும் பரவாமல் இருக்க முன் எச்சரிக்கை நடவடிக்கையாக போதுமான அளவில் பிளிச்சிங் பவுடர், மருந்துகள் இருப்பில் வைக்க வேண்டும்.

★ தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகள், போதுமான அளவு மருந்துகள் இருப்புடன், தயார் நிலையில் இருக்க வேண்டும். மேலும், மருத்துவமனையிலுள்ள தாழ்வான பகுதிகளில் உள்ள ஜெனரேட்டர்களை உயரமான இடத்தில் மாற்றி அமைக்க வேண்டும்.

அத்தியாவசிய பொருட்கள்

★ பேரிடர் காலங்களில் இரண்டு மாத காலத்திற்கு தேவைப்படும் அத்தியாவசிய பொருட்கள், நியாய விலைக்கடைகளில் போதுமான அளவில் இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ அனைத்து மாவட்டங்களிலும், பெருநகர சென்னை மாநகராட்சியிலும் நியமனம் செய்யப்பட்டுள்ள இந்திய ஆட்சிப் பணி நிலையிலான கண்காணிப்பு அலுவலர்கள் அந்தந்த மாவட்டங்களில், பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

★ வடகிழக்கு பருவ மழைக் காலத்தில் உயிர் சேதம் மற்றும் பொருட் சேதம் ஏற்படாமல் இருக்க, அனைத்து துறையினைச் சார்ந்த செயலர்களும், துறைத் தலைவர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

**ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர்கள்**

இந்தக் கூட்டத்தில், துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், வனத்துறை அமைச்சர் திண்டுக்கல் சி. சீனிவாசன், பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் பி.தங்கமணி, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் எஸ். பி.வேலுமணி,

மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் டி.ஜெயகுமார், உயர்கல்வித் துறை அமைச்சர் கே.பி. அன்பழகன், வேளாண்மைத் துறை அமைச்சர் இரா.துரைக்கண்ணு, வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் ஆர்.பி.உதயகுமார், தலைமைச் செயலாளர் க.சண்முகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ஹன்ஸ் ராஜ் வர்மா,

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, கூடுதல் தலைமை செயலாளர் அதுல்யா மிஸ்ரா, நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கே.பிரபாகர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ஹர்மந்தர் சிங், கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர் பணீந்திர ரெட்டி, காவல் துறை தலைமை இயக்குநர் ஜெ.கே.திரிபாதி,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்பு, பால்வளத் துறை முதன்மைச் செயலாளர் கே.கோபால், வேளாண்மை துறை முதன்மைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் கே.மணிவாசன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் பங்கஜ் குமார் பன்சால்,

சென்னை மாநகராட்சி ஆணையர் ஜி.பிரகாஷ், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் த.ந.ஹரிஹரன், பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் முனைவர் டி.ஜகந்நாதன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இணை மேலாண்மை இயக்குநர் நிர்மல் ராஜ், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் கே.எஸ்.பழனிசாமி, நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் கே.பாஸ்கரன், பேரூராட்சிகளின் இயக்குநர் எஸ்.பழனிசாமி, காவல் துறை தலைவர் சி.சைலேந்திர பாபு, சென்னை பெருநகர காவல் துறை ஆணையர் மகேஷ் குமார் அகர்வால், நெடுஞ்சாலைத் துறை தலைமை பொறியாளர் சாந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ரூ.10,055 கோடி முதலீடு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலவி வரும் சூழ்நிலையின் காரணமாக, இந்த 14 திட்டங்களில், 4 திட்டங்களுக்கு காணொலிக் காட்சி மூலமாகவும், 10 திட்டங்களுக்கு நேரடியாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

காணொலிக் காட்சிகள் மூலமாக கையெழுதிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விவரங்கள்:–

1) தூத்துக்குடி, தென்காசி, திருநெல்வேலி, ராமநாதபுரம் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில், 6300 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 2,420 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ஜெ.எஸ். டபிள்யூ. ரினுவபிள் எனர்ஜி லிமிடெட் நிறுவனத்தின், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

**ஸ்பெயின் நிறுவனம்**

2) ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த மந்த்ரா டேட்டா சென்டர்ஸ் நிறுவனம், சென்னைக்கு அருகில் 750 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 550 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தகவல் தரவு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

3) ஆஷெங் ஹைடெக் லிமிடெட் நிறுவனம், 200 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கார்பன் ஃபைபர் தகடுகள் உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

**சிங்கப்பூர்**

4) சிங்கப்பூர் நாட்டைச் சேர்ந்த வேன்ஸ் கெமிஸ்ட்ரி நிறுவனம், 50 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 750 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் மின் கழிவு மேலாண்மை வசதி, மறுசுழற்சி மற்றும் விலை மதிப்புமிக்க உலோகங்களை சுத்திகரித்தல் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

நேரடியாக கையெழுதிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் விவரங்கள்

5) காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் ஒரகடம் தொழிற் பூங்காவில், அப்பல்லோ டயர்ஸ் நிறுவனம், 505 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 300 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், டயர்கள் உற்பத்தி விரிவாக்க திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

6) காஞ்சிபுரம் மாவட்டம், ஒரகடத்தில் ஹிரானந்தனி குழுமத்தைச் சேர்ந்த கிரீன்பேஸ் இன்டஸ்ட்ரியில் பார்க்ஸ் நிறுவனம், 750 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், இன்டஸ்ட்ரியல் லாஜிஸ்டிக்ஸ் பார்க் அமைத்திடும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

**அமெரிக்க நிறுவனம்**

7) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த டி.பி.ஐ. காம்போசிட்ஸ் நிறுவனம், 300 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 1000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், 'வின்ட் பிளேட்ஸ்' உற்பத்தி விரிவாக்கத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். இந்நிறுவனம், 2019–ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது. இப்பொழுது இந்நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்திற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது.

8) லி–எனர்ஜி நிறுவனம், 300 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 325 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மின்சார வாகனங்களுக்கான மின்கலன் பொதிகள் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

9) திருவள்ளூர் மாவட்டத்தில், தென் கொரிய நாட்டைச் சேர்ந்த எல். எஸ். ஆட்டோமொட்டிவ் பிரைவேட் நிறுவனம், 250 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 200 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மோட்டார் வாகனங்களுக்கான ஸ்விட்சஸ் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

10) திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சிப்காட் கங்கைகொண்டான் தொழிற் பூங்காவில், பிரிட்டானியா நிறுவனம், 250 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், பிஸ்கட்ஸ் தயாரிக்கும் விரிவாக்கத் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். இந்நிறுவனம், 2019–ம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது, உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிட்டது. இப்பொழுது இந்நிறுவனத்தின் விரிவாக்கத் திட்டத்திற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டுள்ளது.

**தென்கொரியா**

11) கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் அயோனக்ஸ் ஏர் புராடக்ட்ஸ் நிறுவனம், 150 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 105 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், லிக்யூட் ஆக்சிஜன் உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். இந்த நிறுவனம் கோவிட் சிகிச்சைக்கு தேவையான ஆக்சிஜனை தமிழ்நாட்டிலுள்ள மருத்துவமனைகளுக்கு வழங்குவதில் முக்கிய பங்காற்றுகிறது.

12) காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில், தென் கொரிய நாட்டைச் சேர்ந்த ஹூண்டாய் வியா நிறுவனம், 109 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 50 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், மோட்டார் வாகன உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

13) சென்னை, அம்பத்தூரில், கிரின் டெக் மோட்டார்ஸ் மற்றும் சர்வீசஸ் நிறுவனம், 90 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 250 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், பேட்டரி மற்றும் பி.எம்.எஸ். உற்பத்தி செய்யும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்.

14) திருவள்ளூர் மாவட்டத்தில் கவுன்டர் மெசர்ஸ் டெக்னாலஜிஸ் நிறுவனம், 51 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 150 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சிறிய ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துப் பொருட்கள் உற்பத்தி திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம். இந்த திட்டம் தமிழ்நாடு பாதுகாப்பு தொழில் பெருந்தடத்தில் அமையவுள்ளது.

என மொத்தம், 14 திட்டங்களின் மூலம், தமிழ்நாட்டிற்கு 10,055 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, சுமார் 7,000 நபர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

இந்த நிகழ்ச்சியில், தொழில் துறை அமைச்சர் எம்.சி. சம்பத், தலைமைச் செயலாளர் க.சண்முகம், தொழில் துறை முதன்மைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் நீரஜ் மித்தல், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் இன்று தலைமைச் செயலகத்தில், காஞ்சிபுரம் மாவட்டம், சிப்காட் ஒரகடம் தொழிற் பூங்காவில், அப்பல்லோ டயர்ஸ் நிறுவனம், 505 கோடி ரூபாய் முதலீட்டில், சுமார் 300 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், டயர்கள் உற்பத்தி விரிவாக்க திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.




முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் இன்று தலைமைச் செயலகத்தில், ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த மந்த்ரா டேட்டா சென்டர்ஸ் நிறுவனம், சென்னைக்கு அருகில் 750 கோடி ரூபாய் முதலீட்டில் சுமார் 550 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தகவல் தரவு மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் காணொலிக் காட்சி மூலமாக கையெழுத்தானது.

# புதுவையில் இன்று 189 பேருக்கு கொரோனா தொற்று

புதுவை , அக். 12 –

புதுவையில் இன்று புதிதாக 189 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்களில் 155 பேர் புதுவையிலும் 14 பேர் காரைக்காலிலும் 4 பேர் ஏனாமிலும் 16 பேர் மாகேயிலும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 24 மணிநேரத்தில் 2 பேர் சிகிச்சை பலனின்றி இறந்தனர். இன்று மட்டும் 250 பேர் குணமடைந்து வீடு திரும்பினர்.

கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு சிகிச்சை பெற்று வருவோர் எண்ணிக்கை 4617 ஆக உயர்ந்தது. இவர்களில் 1415 பேர் புதுவையிலும் 102 பேர் காரைக்காலிலும் 63 பேர் ஏனாமிலும் 88 பேர் மாகேயிலும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2949 பேர் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டு அவரவர் வீடுகளில் தங்கிச் சிகிச்சை பெறுகிறார்கள்.

இதுவரை தொற்று பாதித்து அரசு மருத்துவ மனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் மொத்தம் – 31 737 பேர். அவர்களில் 565 பேர் சிகிச்சை பலனின்றி இறந்தனர். குணமடைந்து வீடுதிரும்பியவர்கள் – 26 555 பேர் ஆவார்கள். மற்றவர்கள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

# இந்தியாவில் இதுவரை 61.49 லட்சம் பேர் டிஸ்சார்ஜ்

புதுடெல்லி, அக்.12–

**இந்தியாவில் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்த வர்களின் எண்ணிக்கை 61 லட்சத்து 49 ஆயிரத்து 536 ஆக உயர்ந்துள்ளது.**

மத்திய சுகாதாரத்துறை வெளியிட்ட தகவலின்படி இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 66,732 பேருக்கு கொரோனா உறுதியானதால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 71 லட்சத்து 20 ஆயிரத்து 539 ஆக உயர்ந்துள்ளது. 816 பேர் மரணம் அடைந்துள்ளனர். இதன்மூலம் கொரோனா வைரசால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,09,150 ஆக உயர்ந்துள்ளது.

கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 61 லட்சத்து 49 ஆயிரத்து 536 ஆக உயர்ந்துள்ளது. நேற்று மட்டும் 71 ஆயிரத்து 559 பேர் குணமடைந்துள்ளனர். புதிய நோய்த்தொற்று எண்ணிக்கையை விட குணமடைந்தோர் எண்ணிக்கை அதிகம். உயிரிழப்பு 1.53 சதவீதமாக உள்ளது. குணமடைந்தோர் விகிதம் 86.36 சதவீதமாக உயர்ந்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் 8 லட்சத்து 61 ஆயிரத்து 853 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தியாவில் நேற்று ஒரே நாளில் 9 லட்சத்து 94 ஆயிரத்து 851 மாதிரிகள் பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக ஐ.சி. எம்.ஆர் தெரிவித்துள்ளது. இதுவரை இந்தியாவில் 8 கோடியே 78 லட்சத்து 72 ஆயிரத்து 93 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளன.

# கோரிக்கை மனுக்களை கிராம நிர்வாக அலுவலகத்தில் வழங்கலாம்: திருவள்ளூர் கலெக்டர் அறிவிப்பு

திருவள்ளூர், அக். 12–

**பொதுமக்கள் தங்கள் கோரிக்கை விண்ணப்பங்களை திங்கட்கிழமைகளில் கிராம நிர்வாக அலுவலகத்தில் அளிக்கலாம் என்று கலெக்டர் மகேஸ்வரி ரவிக்குமார் கூறியுள்ளார்.**

இது குறித்து திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் மகேஸ்வரி ரவிக்குமார் கூறியிருப்பதாவது:

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வந்தது. கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக திங்கட்கிழமைகளில் நடத்தப்பட்டு வந்த மக்கள் குறைதீர் கூட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், பொதுமக்களின் நலன்கருதி இன்று முதல் பிரதி வாரம் திங்கட்கிழமைகளில் (அரசு விடுமுறை நாட்கள் தவிர்த்து) அந்தந்த கிராமங்களில் தொடர்புடைய கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை கோரிக்கை விண்ணப்பங்கள் பெறப்படும். ஒவ்வொரு கோரிக்கையும் முறையாக பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிலையில, தேவையின்றி மாவட்ட கலெக்டர் அலுவலகம் வருவதை தவிர்க்கவும், சமூக விலகலை கடைபிடிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு கலெக்டர் மகேஸ்வரி ரவிக்குமார் கூறியுள்ளார்.

# இதுவரை 6 லட்சத்து 2 ஆயிரம் பேர் குணமடைந்து டிஸ்சார்ஜ்

## நேற்று 90,107 பேருக்கு கொரோனா பரிசோதனை

சென்னை, அக்.12–

**தமிழகத்தில் கொரோனா பாதிப்பிலிருந்து குணமடைந்து இதுவரை 6 லட்சத்து 2 ஆயிரத்து 38 பேர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர்.**

தமிழகத்தில் நேற்றைய கொரோனா பாதிப்பு குறித்து சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழகத்தில் நேற்று 3 ஆயிரத்து 53 ஆண்கள், 1,962 பெண்கள் என மொத்தம் 5 ஆயிரத்து 15 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று அனைத்து மாவட்டங்களிலும் புதிய தொற்று பாதிப்பு ஏற்பட்டு உள்ளது.

அதிகபட்சமாக சென்னையில் 1,250 பேரும், கோவையில் 389 பேரும், சேலத்தில் 294 பேரும், குறைந்தபட்சமாக தென்காசியில் 19 பேரும், பெரம்பலூரில் 12 பேரும் பாதிக்கப்பட்டு உள்ளனர். தமிழகத்தில் இதுவரை 6 லட்சத்து 56 ஆயிரத்து 385 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டு உள்ளது. அந்த வகையில் இந்த பட்டியலில் 3 லட்சத்து 96 ஆயிரத்து 505 ஆண்களும், 2 லட்சத்து 59 ஆயிரத்து 849 பெண்களும், 3ம் பாலினத்தவர் 31 பேரும் அடங்குவர். அதில் 12 வயதுக்கு உட்பட்ட 24 ஆயிரத்து 835 குழந்தைகளும், 60 வயதுக்கு மேற்பட்ட 84 ஆயிரத்து 318 முதியவர்களும் இடம் பெற்றுள்ளனர்.

கொரோனாவுக்கு அரசு மருத்துவமனையில் 26 பேரும், தனியார் மருத்துவமனையில் 39 பேரும் என 65 பேர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளனர். இதுவரையில் தமிழகத்தில் 10 ஆயிரத்து 252 பேர் கொரோனா நோய் தொற்றால் உயிரிழந்துள்ளனர். சென்னையில் மட்டும் 3,415 பேர் இறந்துள்ளனர்.

நேற்று 5 ஆயிரம் பேர் டிஸ்சார்ஜ்

கொரோனா பாதிப்பில் இருந்து நேற்று 5 ஆயிரத்து 5 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர். இதில் அதிகபட்சமாக சென்னையில் 1,070 பேரும், கோவையில் 390 பேரும், செங்கல்பட்டில் 364 பேரும் அடங்குவர். இதுவரையில் 6 லட்சத்து 2 ஆயிரத்து 38 பேர் குணம் அடைந்து உள்ளனர். சிகிச்சையில் 44 ஆயிரத்து 95 பேர் உள்ளனர். தமிழகத்தில் அதிகபட்சமாக சென்னையில் 1 லட்சத்து 82,014 பேரும், செங்கல்பட்டில் 39,347 பேரும், கோவையில் 37,117 பேரும், திருவள்ளூரில் 34,741 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தின் 35 மாவட்டங்களில் கொரோனா பாதித்தோர் எண்ணிக்கை சராசரியாக 4 ஆயிரத்தை தாண்டியது.

தமிழகத்தில் 191 அரசு மற்றும் தனியார் ஆய்வகங்களில் இதுவரை 83 லட்சத்து 22 ஆயிரத்து 832 பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நேற்று மட்டும் 90,107 பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 80 லட்சத்து 84 ஆயிரத்து 587 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இதில் நேற்று 88 ஆயிரத்து 439 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.





# ரூ.35 லட்சத்தில் சீரமைக்கப்பட்ட ராணி மங்கம்மாள் குளம்: அமைச்சர் கே.சி.வீரமணி திறந்து வைத்தார்

திருப்பத்தூர், அக். 12–

**ஜோலார்பேட்டை நகராட்சியில் உள்ள 17 ஆம் நூற்றாண்டையொட்டி ரூ.35 லட்சத்தில் சீரமைக்கப்பட்டதை வரலாற்று சிறப்பு வாய்ந்த ராணி மங்கம்மாள் குளத்தை அமைச்சர் கே.சி.வீரமணி திறந்து வைத்தார்.**

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை நகராட்சி அலுவலகம் அருகில் 17 ஆம் நூற்றாண்டு பழமைவாய்ந்த ராணி மங்கம்மாள் குளம் சுமரர் 38 மீட்டர் அகலம், 38 மீட்டர் நீளம் மற்றும் 8 மீட்டர் ஆழத்துடன் 48 லட்சம் லிட்டர் நீர் கொள்ளவு கொண்ட குளம் ரூ. 35 லட்சம் மதிப்பீட்டில் தூர் வாரி சீரமைக்கப்பட்டது. அதன் திறப்பு விழா மாவட்ட கலெக்டர் ம.ப.சிவன்அருள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பொ.விஜயகுமார் முன்னிலையில் நடைபெற்றது. வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் கே.சி. வீரமணி சீரமைக்கப்பட்ட குளத்தை திறந்து வைத்து பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:

மழைநீர் சேகரிப்பு திட்டத்தை செயல்படுத்திய அம்மாவின் நல்லாசியுடன், குடிமராமத்து திட்டத்தை செயல்படுத்தி வரும் முதலமைச்சரின் ஆணையின்படியும் ஜோலார்பேட்டை நகராட்சி பகுதியில் 17 நூற்றாண்டின் வரலாறு மதுரையை ஆண்ட ராணி மங்கம்மாள் என்ற அரசி திப்புசுல்தான் ஆட்சிக்காலத்தில் இப்பகுதியில் வந்து தங்கிருந்தபோது அவர்களின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்ட இக்குளம் காலப்போக்கில் சிதலமடைந்து விட்டது. இதனை இப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று தற்போது சீரமைக்கப்பட்டுள்ளது.

மழை காலங்களில் இப்பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்திடவும் மக்களின் பயன்பாட்டிற்காகவும் இது மிகவும் உதவியாக இருக்கும். மேலும் குளத்தை சுற்றி பூங்கா மற்றும் நடைபாதை, தெருவிளக்குகள் அமைத்து மக்கள் பொழுதுபோக்கிடும் வகையில் அமைக்க கோரிக்கை வைத்துள்ளீர்கள் இவையும் விரைவில் நிறைவேற்றி தரப்படும். ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதிக்கு மட்டும் ரூ.190 கோடி மதிப்பீல் குடிநீர் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை மகேஷ்பாபு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.ஜி.ரமேஷ், மாவட்ட கூட்டுறவு அச்சக தலைவர் டி.டி. குமார், கூட்டுறவு ஒன்றிய தலைவர் வெங்கடேசன், திருப்பத்தூர் சர்க்கரை ஆலைத்தலைவர் ஏ.ஆர்.ரரேஜந்திரன், நகராட்சி ஆணையாளர் ராமெஜயம், அரசு மேல்நிலைப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் சீனிவாசன், பார்த்தீபன், முன்னாள் ஒன்றியக் குழுத்தலைவர்கள் ரமேஷ், திருப்பதி. ஒன்றியக்குழு உறுப்பினர் சிவாஜி, நகராட்சி பொறியாளர் தனபாண்டியன் மற்றும் பலர் கலந்துக் கொண்டனர்.

# எடப்பாடி பழனிசாமி தலைமையில் தொடர்ந்து 3வது முறையாக அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வரும்

## அமைச்சர் சி.வி. சண்முகம் பேச்சு

விழுப்புரம், அக். 12–

**முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் தமிழகத்தில் தொடர்ந்து மூன்றாவது முறையாக அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வரும் என்று அமைச்சர் சி.வி. சண்முகம் பேசினார்.**

விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் மேற்கு ஒன்றிய அண்ணா தி.மு.க. சார்பில், மேல்பாக்கம் கிராமத்தில், இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை உறுப்பினர் சேர்க்கை ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு ஒலக்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் தாதாபுரம் கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கினார்.

உறுப்பினர் சேர்க்கை முகாமை சட்டத்துறை அமைச்சர் சி.வி. சண்முகம் துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழகத்தில் நான்கு மாதத்தில் தேர்தல் வர உள்ளது. அண்ணா தி.மு.க.,விற்கு எப்போதும் தாய்மார்களின் ஆதரவு உண்டு. முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் தமிழகத்தில் மூன்றாவது முறையாக அண்ணா தி.மு.க.,ஆட்சிக்கு வரும். அண்ணா தி.மு.க.,வில் சாதரண தொண்டனாக இருப்பவருக்கு கூட பதவி கிடைக்கும். முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆரம்பத்தில் சாதாரண உறுப்பினராக இருந்து, கிளைச்செயலாளர் என படிப்படியாக உயர்ந்து முதல்வராகி உள்ளார். இதுபோல் தி.மு.க.,வில் நடக்காது. தி.மு.க.வில் கருணாநிதி குடும்பத்தை சேர்ந்தவர்கள் தான் பதவிக்கு வரமுடியும். தி.மு.க., பிரைவேட் கம்பெனி போல் ஆகிவிட்டது. அண்ணா தி.மு.க.,வில் மட்டும் தான் உழைத்தால் கட்சி பதவி தேடி வரும். இவ்வாறு அமைச்சர் சண்முகம் பேசினார்.

கூட்டத்தில் துணை செயலர் மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் ஜெயப்பிரகாஷ், விழுப்புரம் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் முகமது ஷெரிப், ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பொன்மலர் தயாளன், மாவட்டஎம். ஜி.ஆர்.மன்ற செயலாளர் ராஜேந்திரன், முன்னாள் ஒன்றிய செயலாளர் பன்னீர், முன்னாள் ஒன்றிய துணைச் செயலாளர் பெருமாள், ஒலக்கூர் மேற்கு ஒன்றிய பேரவை செயலாளர் செந்தமிழ், பாசறை செல்வம், முன்னாள் ஒலக்கூர் ஒன்றிய மாணவரணி செயலாளர் ராஜசேகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருக்கழுக்குன்றத்தில் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எஸ்.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை ஆலோசனைக் கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளரும், ஊரக தொழில்துறை அமைச்சருமான பா.பென்ஜமின், இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளரும், எம்.எல்.ஏ.வுமான வி.பி.பி.பரமசிவம், ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் கழக பாசறை இணை செயலாளர் சிவக்குமார், மாவட்ட மகளிரணி செயலாளர் மரகதம்குமரவேல், எம்.ஜி.ஆர் மன்ற செயலாளர் வி.வேலாயுதம், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் வி.எஸ்.ராஜி, வாசுதேவன், பூவராகமூர்த்தி, மாவட்ட அம்மா பேரவை செயலாளர் ஆனூர் வி.பக்தவச்சலம், இணை செயலாளர் லீலாவதி அகோரம், துணை செயலாளர்கள் எஸ்வந்த்ராவ், மஞ்சுளாரவிக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் வேட்பாளராக எடப்பாடி கே.பழனிசாமி அறிவிப்பு வெளியானதும், காஞ்சீபுரம் மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான வி.சோமசுந்தரம் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமிக்கு பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவித்தார்.



முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை செங்கல்பட்டு மேற்கு மாவட்ட எம்.ஜி.ஆர். இளைஞர் அணி மாவட்ட இணைச் செயலாளர் டாக்டர் பா. முரளிதரன் நேரில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்து, தமிழ் பல்கலைக் கழகத்தின் 42 வது பட்டமளிப்பு விழாவில் தனக்கு சிறந்த சமூக சேவைக்கான முனைவர் பட்டம் வழங்கப்பட்டதற்கு வாழ்த்து பெற்றார். மு.மாலா முரளிதரன், வி.ஜி. அசோகன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணனுக்கு கொரோனா

சென்னை, அக்.12–

**மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணனுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.**

நாடு முழுவதும் பெரும்பாலான மாநிலங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கொரோனா வைரஸ் தொற்றால் முன் கள பணியாளர்கள், பிரபலங்கள், அரசியல் தலைவர்கள் பலரும் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். சிலர் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர்.

இந்நிலையில் மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணனுக்கு மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில் தொற்று இருப்பது இன்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து அவர் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். தற்போது அவர் நல்ல உடல்நலத்துடன் இருக்கிறார்.



# இருளர்கள் 33 பேருக்கு இனச் சான்றிதழ்: கலெக்டர் பொன்னையா வழங்கினார்

காஞ்சீபுரம், அக். 12–

காஞ்சீபுரம் கோட்டத்தில் உள்ள இருளர்கள் 33 பேருக்கு இனச் சான்றிதழை மாவட்ட கலெக்டர் பா.பொன்னையா வழங்கினார்.

காஞ்சீபுரம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந் நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் பா.பொன்னையா தலைமை வகித்தார். சப்–கலெக்டர் சரவணன், வட்டாட்சியர் பவானி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் இருளர்கள் 33 பேருக்கு இனச்சான்றிதழ் வழங்கப்பட்டது. 129 பயனாளிகளுக்கு முதல்வரின் சாலை விபத்து நிவாரண நிதியாக ரூ. 1.22 கோடி மதிப்பிலான காசோலைகளும் வழங்கபட்டது. இதனைத் தொடர்ந்து 23 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ. 18 லட்சம் மதிப்பில் இலவச வீட்டு மனைப்பட்டாகளையும், 19 பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை பெறுவதற்கான அரசு உத்தரவையும் கலெக்டர் பா.பொன்னையா வழங்கினார்.

7 அடி 6 அங்குலம்


# உலகின் உயரமான பந்து வீச்சாளராகப் பயிற்சி எடுக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்

லாகூர், அக். 12–

**7 அடி 6 அங்குல உயரத்தில் உலகின் உயரமான பந்து வீச்சாளராக பாகிஸ்தான் இளம் கிரிக்கெட் வீரர் பயிற்சி எடுத்து வருகிறார்.**

பாகிஸ்தான் சூப்பர் லீக்கில் லாகூர் குவாலண்டர்ஸ் அணியில் முடாசிர் குஜ்ஜார் எனும் இளம் வீரர் பயிற்சி எடுத்து வருகிறார். லாகூர் நகரைச் சேர்ந்த 21 வயதாகும் முடாசிர் குஜ்ஜாரின் உயரம் 7 அடி 6 அங்குலம் ஆகும். 23ம் நம்பர் ஷூ, செருப்பு அணியும் இவரது பேண்ட் உயரம் 53 செ.மீ. பாகிஸ்தான் அணியின் இடது கை வேகப்பந்துவீச்சாளர் முகமது இர்பான் தற்போது கிரிக்கெட்டில் மிக உயரமான வீரர். இவரின் உயரம் 7.1 அடியாகும். ஆனால், முடாசிர் சர்வதேச கிரிக்கெட்டுக்கு வந்தால், உயரமான வீரர் எனும் பெருமையைப் பெறுவார். வேகப்பந்துவீச்சாளராக இல்லாமல் சுழற்பந்து வீச்சாளராகப் பயிற்சி எடுத்துவருவது சர்வதேச அணிகளுக்கு ஆறுதலாகும். முடாசிரின் அதிகமான உயரம் அனைவரையும் வியக்கவைக்கும் வகையில் இருந்தாலும், தனிப்பட்ட ரீதியில் பல்வேறு பிரச்சினைகளை அவருக்கு உருவாக்கியுள்ளது.

அதுகுறித்து முடாசிர் ஒரு இணையதளத்துக்கு அளித்த பேட்டியில், “நான் உயரமாக இருப்பதால், பள்ளி, கல்லூரிகளில் பெரும் கிண்டலுக்கு ஆளானேன். என்னால் சராசரி மனிதர்களைப் போல்



பேருந்து, சைக்கிள் ரிக்சாவில் செல்ல முடியாது. காரில் கூட செல்ல முடியாது. கால்களை வைக்க முடியாததால், பெரும் சிரமப்படுகிறேன். எப்படி இருந்தாலும் இந்த உயரம் எனக்கு இறைவன் அளித்தது. இந்த உயரத்தால் நான் ஓடுவதில் எந்தவிதமான சிரமமும் இல்லை. தற்போது லாகூர் குலாண்டர் அணியில் இணைந்து கிரிக்கெட் பயிற்சி எடுத்து வருகிறேன்.

கொரோனா வைரஸ் காரணமாக கடந்த சில மாதங்களாக பயிற்சி எடுக்க முடியவில்லை. விரைவில் சர்வதேச கிரிக்கெட் உலகிற்கு வருவேன். உலகிலேயே உயரமான கிரிக்கெட் வீரர் எனும் பெருமையைப் பெறுவேன்” எனத் தெரிவித்துள்ளார்.

# காஷ்மீரில் 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

ஜம்மு, அக். 12–

காஷ்மீரில் ஸ்ரீநகரின் ரம்பாக் பகுதியில் பாதுகாப்பு படையினருடன் ஏற்பட்ட மோதலில் 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த 2 பேரில், ஒருவர் பாகிஸ்தான் பயங்கரவாதி சைபுல்லா என்றும் மற்றொருவர் உள்ளூரைச் சேர்ந்தவன் என்று மத்திய ரிசர்வ் காவல் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், கடந்த செப்டம்பர் மாதத்தில் சைபுல்லா சிஆர்பிஎப் வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியவர் ஆவார். அண்மையில் நாவ்காமில் நடந்த தாக்குதலில் 2 வீரர்கள் உயிரிழந்தனர்.

இன்று அதிகாலை இந்த துப்பாக்கிச் சூடு நடைபெற்றுள்ளது. தொடர்ந்து அந்தப் பகுதியில் பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

# பட்டாசு விற்பனையாளர்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்: திருவள்ளூர் கலெக்டர் அறிவிப்பு

திருவள்ளூர், அக். 12–

திருவள்ளூர் மாவட்டத்தில், பட்டாசுகள் வாங்கி விற்பனை செய்ய விரும்பும் விற்பனையாளர்கள் மற்றும் வணிகர்கள் தற்காலிக உரிமம் பெற உரிய ஆவணங்களுடன் 15–ந் தேதி வரை இசேவை மையங்கள் மூலமாக ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என்று கலெக்டர் மகேஸ்வரி ரவிக்குமார் கூறியுள்ளார்.

மேலும் ஆன்லைன் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விசாரணை முடிவுபெற்றவுடன், ஆன்லைன் மூலமாகவே தங்களுடைய மனு ஏற்றுக்கொள்ளப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதா என்ற விவரத்துடனும், தற்காலிக உரிமத்தின் ஆணையினை தீபாவளி பண்டிகைக்கு ஒரு மாதத்தின் முன்பாகவே இ–சேவை மையம் மூலமாகவே பதிவிறக்கம் செய்யலாம். உரிமம் இன்றி பட்டாசு விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டால் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட கலெக்டர் மகேஸ்வரி ரவிக்குமார் கூறியுள்ளார்.

# என்ஜீனியரிங் மாணவர்களுக்கான 2–ம்கட்ட கலந்தாய்வு துவங்கியது

சென்னை, அக். 12–

என்ஜினியரிங் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான 2ம் கட்ட இணையவழி கலந்தாய்வு இன்று தொடங்குகிறது.

அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் என்ஜினியரிங் கல்லூரிகளில் நடப்பு கல்வியாண்டுக்கு 1.63 லட்சம் இடங்கள் இருக்கிறது. இதற்கான மாணவர் சேர்க்கை தொடங்கிய நிலையில், முதல் கட்ட கலந்தாய்வில் 457 இடங்கள் ஒதுக்கப்பட்டன. இது சிறப்பு பிரிவினருக்கான இடங்கள். இதனைத் தொடர்ந்து கடந்த 8ம் தேதி நடைபெற்ற பொதுப் பிரிவினருக்கான கலந்தாய்வில் 12,263 பேர் அனுமதிக்கப்பட்டனர்.

அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள், பிடித்த கல்லூரிகளில் இணையதளம் மூலம் தங்களுக்கு தேவையான பாடப்பிரிவுகளை 2 நாட்களுக்குள் (இன்றும் நாளையும்) தேர்வு செய்ய வேண்டும் என்றும் அதன் பின்னர் வரும் 14ம் தேதி தற்காலிக ஒதுக்கீட்டுப் பட்டியல் வெளியிடப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

இந்த நிலையில், என்ஜினியரிங் படிப்பில் சேரவிருக்கும் மாணவர்களுக்கான 2ம் கட்ட கலந்தாய்வு இன்று தொடங்குகிறது. இன்று முதல் 15ம் தேதி வரை மாணவர்கள் கட்டணம் செலுத்தலாம் என்றும் பிற விவரங்களை இணையதள வாயிலாக தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையிலிருந்து புறப்படும் தேஜஸ் ரெயில் நேரம் மாற்றம்

சென்னை, அக்.12

சென்னையில் இருந்து இயக்கப்படும் தேஜஸ் சிறப்பு ரெயில் புறப்படும் நேரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

★ சென்னை எழும்பூர் – மதுரை (வண்டி எண்: 02613) இடையே இயக்கப்படும் தேஜஸ் சிறப்பு ரெயில், காலை 6 மணிக்கு எழும்பூர் ரெயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டு, மதியம் 12.20 மணிக்கு மதுரை சென்றடையும் வகையில் இயக்கப்பட்டு வந்தது.

இந்தநிலையில் தேஜஸ் சிறப்பு ரெயில் நாளை முதல் 6 மணிக்கு பதிலாக 6.30 மணிக்கு எழும்பூரில் இருந்து புறப்பட்டு மதியம் 12.50 மணிக்கு மதுரை சென்றடையும். மேலும் அந்த ரெயில் திருச்சிக்கு காலை 10.30 மணிக்கும், கொடைக்கானல் ரோடுக்கு காலை 11.53 மணிக்கும் வந்தடையும்.

ஆனால் மறுமார்க்கமாக மதுரையில் இருந்து எழும்பூருக்கு வரும் தேஜஸ் சிறப்பு ரெயிலின் புறப்படும் நேரத்தில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# “உயர்மட்ட தலைவர்களால் நசுக்கப்பட்டேன்:” காங்கிரஸ் மீது குஷ்பு பாய்ச்சல்

## பாரதீய ஜனதாவில் இணைந்தார்

**புதுடெல்லி,அக்.12–**

**நடிகை குஷ்பு இன்று பாரதீய ஜனதா கட்சியில் சேரும் முன்னதாக காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். இதை தொடர்ந்து குஷ்பு காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகினார்.**

**உயர்மட்ட தலைவர்களால் நசுக்கப்பட்டேன் என சோனியாவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.**

பிரபல நடிகை குஷ்பு 2010ம் ஆண்டில் தி.மு.க.வில் சேர்ந்தார். 4 ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் அந்த கட்சியை விட்டு வெளியேறினார். அப்போது "தி.மு.க.வுக்கு கடின உழைப்பு ஒரு வழி பாதையாக உள்ளது" என்று கூறியிருந்தார்.

அதே ஆண்டு 2014–ல் சோனியா காந்தியை சந்தித்த பின்னர் காங்கிரசில் சேர்ந்தார். அப்போது அவர், "நான் இறுதியாக நான் சொந்த வீட்டில் இருப்பதாக உணர்கிறேன். இந்திய மக்களுக்கு நல்லது செய்து நாட்டை ஐக்கியப்படுத்தக்கூடிய ஒரே கட்சி காங்கிரஸ் தான்" என கூறினார்.

குஷ்பு 2014 முதல் 6 வருடங்களுக்கு மேலாக காங்கிரசில் இருந்து வருகிறார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் செய்தி தொடர்பாளரான நடிகை குஷ்பு, கடந்த சில நாட்களாக டுவிட்டரில் மத்திய அரசு கொண்டு வந்த தேசிய கல்வி கொள்கையை ஆதரித்து பதிவிட்டார். அதேபோல் உள்துறை அமைச்சர் அமித்ஷா, மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தபோது அவர் நலம் பெற வாழ்த்து தெரிவித்தார்.

அண்ணா தி.மு.க. முதலமைச்சர் வேட்பாளராக தேர்வு செய்யப்பட்ட தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமிக்கும் வாழ்த்து தெரிவித்தார். பிரதமர், உள்துறை அமைச்சர், முதலமைச்சர் ஆகியோருக்கு வாழ்த்து சொல்வதில் எந்த தவறும் இல்லை எனவும் அவர் கூறி வந்தார்.

இந்த நிலையில் நடிகை குஷ்பு பாரதீய ஜனதாவில் இணைய போவதாக கடந்த சில வாரங்களாகவே தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன. எனினும், குஷ்பு இந்த தகவலை மறுத்து வந்தார்.

டெல்லிக்கு வருவதற்காக நடிகை குஷ்பு நேற்று இரவு 9.30 மணிக்கு திடீரென அவசரம் அவசரமாக சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்தார்.அப்போது நடிகை குஷ்புவிடம் நிருபர்கள், நீங்கள் பாரதீய ஜனதா கட்சியில் இணைய உள்ளதாக தகவல் வருகிறதே உண்மையா? என்று கேட்டனர். அதற்கு அவர், “கருத்து சொல்ல விரும்பவில்லை” (நோ கமெண்ட்ஸ்) என பதில் அளித்தார்.

### வெளியேறியதால் எந்த இழப்பும் இல்லை: கே.எஸ்.அழகிரி

குஷ்பு காங்கிரசிலிருந்து விலகியது குறித்து தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி இன்று சென்னையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

“கடந்த 6 மாதங்களாக கட்சிக்கு விரோதமாக, கட்சி நிலைப்பாட்டுக்கு விரோதமாக, தலைவர் ராகுல் காந்திக்கு எதிராகவே கருத்துகளைப் பதிவிட்டுள்ளார் குஷ்பு. கட்சியில் மாறுபட்ட கருத்துகள், கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அதைக் கட்சிக்குள் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். இதைவிட காங்கிரஸில் உயர்ந்த பொறுப்பு அவருக்குக் கிடைக்காது, அவர் சென்றதால் எந்த இழப்பும் கட்சிக்குக் கிடையாது. எந்தக் காலத்திலும் அவரால் காங்கிரஸுக்கு லாபம் இல்லை.

காங்கிரஸுக்கும் அவருக்கும் எந்த உறவும் கிடையாது. அவர் தாமரை இலைத் தண்ணீராகத்தான் கட்சியில் இருந்தார். அவரை ஒரு நடிகையாகத்தான் காங்கிரஸ் கட்சி தொண்டர்கள் பார்த்தார்களே தவிர அரசியல் தலைவராக அவரைப் பார்க்கவில்லை.

காங்கிரஸ் இயக்கம் சிந்தாந்த ரீதியாக, கொள்கை ரீதியான 100 ஆண்டுகளைக் கடந்த பேரியக்கம். இதைப்போன்ற தனி மனிதர்கள் செய்கையால் ஒருபோதும் பலவீனமடையாது. இப்பொழுதுகூட இவராகத்தான் போய் பாரதீய ஜனதாவில் இணைகிறாரே தவிர அவர்கள் யாரும் இவரை அழைத்ததாகத் தெரியவில்லை.

இவ்வாறு கே.எஸ்.அழகிரி தெரிவித்துள்ளார்.

மேலும் அவரிடம், நீங்கள் காங்கிரஸ் கட்சியில் தொடர்ந்து நீடிக்கிறீர்களா? என்று கேட்டதற்கும் அவர் பதில் அளிக்கவில்லை. அத்துடன் எந்த கேள்விக்கும் பதில் சொல்ல போவதில்லை என கூறிவிட்டு சென்றார். அவருடன் அவருடைய கணவரும், திரைப்பட இயக்குனருமான சுந்தர்.சி.யும் உடன் இருந்தார்.

**நீக்கம்**

இதனையடுத்து இன்று காலை குஷ்புவை காங்கிரஸ் கட்சியின் தேசிய செய்தி தொடர்பாளர் பொறுப்பில் இருந்து நீக்குவதாக அக்கட்சியின் மூத்த செயலர் பிரனவ்ஜா தெரிவித்தார்.

இந்த அறிவிப்பு வெளியான சில நிமிடங்களில் குஷ்பு ஒரு அறிக்கை வெளியிட்டார். காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கு அனுப்பி உள்ள அந்த கடிதத்தில் குஷ்பு கூறியிருப்பதாவது:– கடந்த 2014ம் ஆண்டு மக்களவை தேர்தலில் கட்சி தோற்கடிக்கப்பட்டபோது, கீழ்மட்டத்தில் காங்கிரஸ் இருந்தபோது கட்சியில் நான் இணைந்தேன். தாம் கட்சியில் உண்மையாக பணியாற்றினேன். இது யாருக்கும் பிடிக்கவில்லை. என்னை ஒடுக்க நினைத்தனர்.

பணம், பதவி, புகழ் போன்ற காரணங்களுக்காக நான் காங்கிரஸ் கட்சியில் சேரவில்லை. கட்சியின் உண்மை நிலை மற்றும் சமூக அங்கீகாரம் ஆகியவற்றுடன் எவ்வித தொடர்பும் இல்லாத சிலரால், கட்சியின் உயர்மட்டத்தில் உள்ள தலைவர்கள் சிலரால் நசுக்கப்பட்டேன். காங்கிரசில் உண்மையாக பணியாற்ற விரும்பிய என்னை போன்றவர்கள் தள்ளிவிடப்பட்டனர்.



காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகிய கையோடு இன்று பிற்பகலில் டெல்லியில் உள்ள பாரதீய ஜனதா தலைமை அலுவலகத்திற்கு நடிகை குஷ்பு வந்தார். அவருடன் தமிழக பாரதீய ஜனதா தலைவர் எல். முருகன் உடனிருந்தார். அங்கு பாரதீய ஜனதாவில் இணைந்த நடிகை குஷ்பு தேசிய தலைவர் ஜே.பி. நட்டாவிடம் ஆசி பெற்றார்.அவருக்கு கட்சியின் அடையாள அட்டை வழங்கப்பட்டது.

இதனால் நான் காங்கிரஸ் அடிப்படை உறுப்பினர் பொறுப்பில் இருந்து விலகி கொள்ள முடிவு செய்துள்ளேன். நீண்டகால முழுமையான பரிசீலனைக்கு பின்பே கட்சியில் இருந்து விலகும் முடிவை எடுத்துள்ளேன். அதன்படி, இந்திய தேசிய காங்கிரசின் முதன்மை உறுப்பினர் பதவியில் இருந்து நான் ராஜினாமா செய்கிறேன்.

காங்கிரசில் பதவி கொடுத்த ராகுல்ஜி மற்றும் கட்சியினர் அனைவருக்கும் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு குஷ்பு கூறியுள்ளார்.



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை, அவரது இல்லத்தில் சேலம் புறநகர் மாவட்டம், எடப்பாடி நகரச் செயலாளர் ஏ.எம். முருகன், எடப்பாடி நகர மன்ற முன்னாள் தலைவர் டி. கதிரேசன், மாவட்ட கூட்டுறவு அச்சக தலைவர் எம். கந்தசாமி, மாவட்ட மீனவர் பிரிவு துணைச் செயலாளர் இ.கே.செந்தில், எடப்பாடி நகர ஜெயலலிதா பேரவை பொருளாளர் பி. நாராயணன் ஆகியோர் நேரில் சந்தித்து, பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றனர்.

# ஆப்பிரிக்க புலம்பெயர்ந்தோர் சென்ற படகு கவிழ்ந்து விபத்து: 11 பேர் பலி

மாஸ்கோ, அக். 12–

ஆப்பிரிக்க நாடுகளில் வாழும் மக்களில் பலர் ஐரோப்பியா உள்ளிட்ட வேறு நாடுகளை நோக்கி அகதிகளாக புலம்பெயர்ந்து வருகின்றனர். இதன் காரணமாக அவர்கள் படகுகள் மூலம் கடல் வழி பயணம் மேற்கொள்கின்றனர்.

இதுபோன்று ஆபத்து நிறைந்த கடல்வழி பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என எச்சரிக்கை விடப்பட்ட போதிலும் பலர் அதனை கவனத்தில் கொள்வதில்லை.

இந்நிலையில், ஆப்பிரிக்காவின் பல நாடுகளை சேர்ந்த சிலர் படகு ஒன்றில் புறப்பட்டு கடல்வழி பயணம் மேற்கொண்டுள்ளனர். அவர்கள் சென்ற படகு துனிஷிய கடற்கரை பகுதி அருகே ஸ்பாக்ஸ் நகருக்கு சற்று தொலைவில் வந்தபோது திடீரென கடலில் கவிழ்ந்தது.

இதில் படகில் இருந்தவர்களில் பலர் நீச்சல் தெரியாமல் நீரில் மூழ்கி தத்தளித்தனர்.

இதுபற்றி தகவல் அறிந்ததும் கடலோர காவல் படையினர் சம்பவ பகுதிக்கு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களில் 11 பேரின் உடல்களை இதுவரை மீட்டுள்ளனர். அவர்களில் 2 பேர் குழந்தைகள் ஆவர். இது தவிர 7 பேரை மீட்பு குழுவினர் மீட்டுள்ளனர். தொடர்ந்து தேடுதல் மற்றும் மீட்பு பணி நடைபெற்று வருகிறது.

# 130 கி.மீ. வேகத்தில் செல்லும் ரெயில்களில் அனைத்து பெட்டிகளுக்கும் ‘ஏசி’ வசதி

புதுடெல்லி, அக்.12

மணிக்கு 130 கி.மீ.க்கு அதிகமான வேகத்தில் இயக்கப்படும் அதிவேக ரெயில்களில் இனி அனைத்து பெட்டிகளும் 'ஏசி' வசதி உடையதாகவே இருக்கும் என ரெயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ரெயில்வே அமைச்சக செய்தித் தொடர்பாளர் டி.ஜே. நாராயணன் கூறியதாவது:–

தற்போது மெயில் மற்றும் எக்ஸ்பிரஸ் ரெயில்கள் அதிகபட்சமாக மணிக்கு 80 முதல் 110 கி.மீ. வேகத்தில் இயக்கப்படுகின்றன. ராஜ்தானி, சதாப்தி, துரந்தோ போன்ற அதிவேக ரெயில்கள் அதிகபட்சமாக மணிக்கு 120 கி.மீ.'வேகத்தில் இயக்கப்படுகின்றன.

இந்த ரெயில்களை 130 முதல் 160 கி.மீ., வேகத்துக்கு மேல் இயக்க முடியும். அதற்கு ஏற்ற வகையில் ரெயில் பாதைகளில் தேவையான மாற்றங்கள் செய்யப்படுகின்றன. மணிக்கு 130 கி.மீ. வேகத்துக்கு மேல் இயக்கப்படும் ரெயில்களில் அனைத்து பெட்டிகளும், 'ஏசி' வசதி உடையதாக இருக்க வேண்டியது தொழில்நுட்ப ரீதியில் அவசியமாகிறது.அதனால் மணிக்கு 130 கி.மீ. வேகத்துக்கு மேல் இயக்கப்படும் அனைத்து ரெயில்களிலும், இனி அனைத்து பெட்டிகளும் 'ஏசி' வசதி உடையதாகவே இருக்கும்.

கபுர்தலாவில் உள்ள ரெயில் பெட்டி தொழிற்சாலையில், 'ஏசி' பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. இந்தாண்டு, 100 பெட்டிகளும், அடுத்தாண்டு 200 பெட்டிகளும் தயாரிக்கப்பட உள்ளன.

தற்போது பயன்பாட்டில் உள்ள துாங்கும் வசதி உடைய பெட்டியில், 72 இருக்கைகளே இருக்கும். அதே நேரத்தில் 'ஏசி' பெட்டியில், 83 பேர் பயணிக்க முடியும். அதிவேக ரெயில்களில், அனைத்து பெட்டிகளும், 'ஏசி' வசதி உடையதாக இருந்தாலும், கட்டணம் மிக அதிகமாக இருக்காது. சிறந்த வசதிகள் கிடைப்பதுடன், பயண நேரம் குறையும். இவ்வாறு அவர் கூறினார்.

# தி.நகரில் 250 பவுன் கொள்ளை வழக்கில் 170 பவுன் தங்கம் மும்பையில் மீட்பு

**சென்னை, அக்.12–**

**தி.நகரில் வயதான தம்பதியரை கட்டி போட்டு 250 பவுன் நகை கொள்ளையடிக்கப்பட்ட வழக்கில் 170 பவுன் நகைகளை தனிப்படை போலீசார் மும்பையில் தங்கக்கட்டிகளாக பறிமுதல் செய்துள்ளனர்.**

சென்னை தி.நகர், சாரதாம்பாள் தெருவைச் சேர்ந்தவர் நூருல் ஹக் (வயது 72). கடந்த மாதம் 30–ம் தேதியன்று இவரது வீட்டுக்குள் அரிவாள்களுடன் நுழைந்த 7 பேர் கொண்ட கொள்ளை கும்பல் நூருல் ஹக்கையும் அவரது மனைவி ஆயிஷா மற்றும் மைத்துனர், கார் டிரைவர் உள்ளிட்டோரை கட்டிப்போட்டனர். பீரோவில் இருந்த 250 பவுன் நகைகள், ரூ. 60 ஆயிரம் மதிப்பிலான வாட்ச், ரொக்கம் ரூ. 60 ஆயிரம் ஆகியவற்றை கொள்ளையடித்தனர். வீட்டில் இருந்த ஆயிஷாவின் உறவினர் முஸ்தபா மற்றும் நூருல் ஹக்கின் கார், ஆட்டோ ஆகியவற்றை கடத்திச் சென்றனர். பின்னர் ஆட்டோவையும், முஸ்தபாவையும் ஜி.என். செட்டி ரோட்டில் இறக்கி விட்டு தப்பியோடி விட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக பாண்டிபஜார் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

கமிஷனர் மகேஷ்குமார் அகர்வால் உத்தரவின் பேரில், கூடுதல் கமிஷனர் தினகரன், இணைக்கமிஷனர் பாபு மற்றும் தி.நகர் துணைக்கமிஷனர் ஹரிகிரன் பிரசாத் மேற்பார்வையில் பாண்டிபஜார் போலீசார் தனிப்படை அமைத்து நடத்திய விசாரணையில் ஆயிஷாவின் உறவினர் மொய்தீன் இந்த கொள்ளையில் உடந்தை என தெரியவந்தது. அவர் தூத்துக்குடியில் தலைமறைவாக இருந்தது தெரியவந்துள்ளது. அவரைப் பிடிக்க தனிப்படை போலீசார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இந்த கொள்ளை வழக்கு தொடர்பாக தனிப்படை போலீசார் கடந்த 5–ம் தேதியன்று தேனாம்பேட்டையைச் சேர்ந்த ஆலென் (வயது 39), போரூரைச் சேர்ந்த விஜய் (வயது 38), வண்டலூாரைச் சேர்ந்த சுகுமார் (வயது 27), செங்கல்பட்டு லோகேஷ் (வயது 25), கூடுவாஞ்சேரி மகேஷ் (வயது 33), கோடம்பாக்கம் தம்பிதுரை (வயது 40), கோகேஷ் குமார் (வயது 25), ஐஸ்அவுசைச் சேர்ந்த ரவுடி எல்லையப்பன் (வயது 45) ஆகிய 8 பேரை கைது செய்து செய்தனர். அவர்களிடம் இருந்து அரிவாள், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

விசாரணையில் நூருல் ஹக்கின் சகோதரர் ரூபிள், மொய்தீனிடம் வாங்கிய கடன் ரூ.40 லட்சத்தை திரும்பத்தராததால் கட்டப்பஞ்சாயத்து செய்து வாங்க வேண்டும் என்று ரவுடி எல்லப்பன் உள்பட கைதான 8 பேரையும் மொய்தீன் சம்பவ தினத்தன்று அழைத்து வந்துள்ளார். ஆனால் திடீரென அரிவாளை காட்டி நகைகளை கொள்ளையடித்துக் கொண்டு நகைகளுடன் மொய்தீன் மட்டும் தலைமறைவானதாக கைதான 8 பேரும் தெரிவித்தனர்.

இந்நிலையில் மொய்தீனைப் பிடிக்க தனிப்படை போலீசார் அவரைத் தேடி வந்தனர். ஆனால் அவரைப் பிடிக்க முடியவில்லை, அவர் தொடர்ந்து தலைமறைவாகவே இருந்தார். செல்போன் டவர் மூலம் மொய்தீனைப் பின்தொடர்ந்த போலீசார் அவர் மும்பைக்கு தப்பியோடியதை கண்டுபிடித்தனர். மும்பை சென்ற தனிப்படை போலீசார் அங்கு சென்று விசாரணை நடத்தியதில் நூருல் ஹக்கின் வீட்டில் கொள்ளைடித்த 250 பவுன் நகைகளை உருக்கி மும்பையில் விற்றது தெரியவந்தது.

தனிப்படை போலீசார் நகைகளை தங்க கட்டிகளாக பறிமுதல் செய்தனர். ஆனால் போலீர் வருவது தெரிந்து மொய்தீன் அங்கிருந்து தப்பியோடி விட்டார். இதுவரை இந்த வழக்கில் 9 பேர் கைது செய்யபட்டுள்ளனர். நகைகளை உருக்கியதால் 170 பவுன் வரை தான், தங்க கட்டிகளாக பறிமுதல் செய்துள்ளதாக போலீசார் தரப்பில் தெரிவித்துள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றியத்தில், நடைபெற்ற கழக புதிய நிர்வாகிகள் அறிமுக நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே சி வீரமணி, நிலோபர் கபில் ஆகியோர் கலந்து கொண்டு எம்ஜிஆர் திருவுருவ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். ஆலங்காயம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கோவி. சம்பத்குமார், ஆலங்காயம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் பூங்குளம் மகேந்திரன், மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் முனுசாமி, மாவட்ட மாணவரணி செயலாளர் தனஞ்ஜெயன், மாவட்ட மகளிரணி செயலாளர் மஞ்சுள கந்தன், உதயேந்திரம் பேரூராட்சி கழகச் செயலாளர் சரவணன், மாவட்ட நிர்வாகிகள் கோ.ம. புஷ்பநாதன், ஏ.ஆர். ராஜேந்திரன், மாவட்ட அனைத்து அணி நிர்வாகிகள் சா .ரமேஷ், டிடிசி சங்கர், நாகேந்திரன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் சி.செல்வம், நகரச் செயலாளர் ஜி. சதாசிவம் , பேரூராட்சி செயலாளர் டி. பாண்டியன் மற்றும் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 1.25 கோடி மதிப்பீட்டில் முகப்பேர் மேற்கு பஸ் நிலையம் அமைக்கும் பணியினை ஊரகத் தொழில் துறை அமைச்சர் பா.பெஞ்ஜமின் ஆய்வு செய்தார். ஒன்றிய செயலாளர் ராஜா என்கிற பேரழகன், வட்ட நிர்வாகிகள் இம்மானுவேல், குட்டி, வேல்முருகன், ரவிகாந்த், ஜோதி, நந்தகுமார், ரவி, மகேஷ், வாசன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# கடைகளில் பூட்டை உடைத்து திருடிய கொள்ளையன் கைது

சென்னை, அக். 12–

சென்னை அடையாறு பகுதியில் கடைகளின் பூட்டை உடைத்து திருடிய கொள்ளையனை போலீசார் கைது செய்தனர்.

சென்னை அடையாறு பகுதியில் கடந்த ஒரு வார காலமாக நள்ளிரவில் கடைகளின் பூட்டை உடைத்து பணம் மற்றும் செல்போன்கள் கொள்ளை போவதாக போலீசாருக்கு புகார்கள் வந்தன. கடந்த 5ம் தேதியன்று, அடையார் கஸ்தூரிபா நகரில் செல்போன் கடை வைத்து நடத்தி வரும் சுரேஷ் என்பவர் கடையின் பூட்டை உடைத்து 3,000 ரூபாய் பணம் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது. இந்த சம்பவம் தொடர்பாக அடையாறு போலீசார் விசாரணை நடத்தினர்.

சம்பவ இடத்தில் உள்ள சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்த போது ஒரே கும்பல் அனைத்து குற்றச் செயல்களிலும் ஈடுபட்டது தெரியவந்தது. அடையாறு துணைக்கமிஷனர் விக்ரமன் மேற்பார்வையில் இன்ஸ்பெக்டர் மனோகரன் தலைமையில் முதல்நிலை காவலர் பன்னீர் ராஜ்குமார், தலைமைக்காவலர் சுப்பிரமணி ஆகியோர் அடங்கிய தனிப்படை அமைக்கப்பட்டது. அதனையடுத்து கடந்த 9ம் தேதியன்று இதேபோல கொள்ளையில் ஈடுபட்ட சிறுவன் ஒருவனைப் பிடித்து போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையில் 4 பேர் சேர்ந்து கடைகளின் பூட்டை உடைத்து கொள்ளை நடத்தியது தெரியவந்தது. அந்த பணத்தில் கஞ்சா வாங்கிப் பயன்படுத்தியுள்ளனர்.

அந்த தகவலின் பேரில் சென்னை, மயிலாப்பூரைச் சேர்ந்த சரண் என்ற சைக்கோ சரண் (வயது 19) என்பவரை கைது செய்தனர்.

மேலும் அவருடன் சேர்ந்து குற்றச் செயலில் ஈடுபட்ட இளஞ்சிறார் ஒருவரும் பிடிபட்டார். திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் தொடர்புரை மற்ற குற்றவாளிகளை போலீசார் தேடி வருகின்றனர்.

## எடப்பாடி பழனிசாமி தலைமையில்

# அண்ணா தி.மு.க. மீண்டும் வெற்றி பெற இளைஞர் பாசறை முழுமையாக ஒத்துழைக்க அக்ரி கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள்



**திருவண்ணாமலை, அக்.12–**

**தமிழகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அண்ணா தி.மு.க. மீண்டும் வெற்றி பெற இளைஞர் பாசறை முழுமையாக ஒத்துழைக்க வேண்டும் என மாவட்ட செயலாளர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி வேண்டுகோள் விடுத்தார்.**

திருவண்ணாமலை நகர 27–வது வார்டு சார்பில் இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை தேர்வு பெற்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனை மற்றும் பூத் கமிட்டி கூட்டம் நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட கலைப் பிரிவு தலைவர் டாக்டர் பழனி வரவேற்றார். நகரச் செயலாளர் செல்வம் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் மாவட்ட செயலாளரும், மாவட்ட ஆவின் தலைவருமான அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கி பேசியதாவது:–

ஜெயலலிதாவின் ஆசியுடன், முதல்வரும் துணை முதல்வரும் தமிழகத்தை சிறப்பான முறையில் அடித்தட்டு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருவதுடன் அதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்து அது முழுவதுமாக மக்களுக்கு சென்று அடைகிறதா என்பதை கண்காணிக்கவும் குழு அமைக்கப்பட்டு இன்று இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக தமிழகம் செயல்படுகிறது.

படித்த இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் அதிக அளவில் அண்ணா திமுகவில் உறுப்பினர்களாக இணைந்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. அதேபோல் நமது கட்சியில் உள்ளவர்கள் கட்சிக்கு விசுவாசமாக செயல்பட வேண்டும். இதுவரை ஜெயலலிதாவின் தலைமையில் வழி நடந்தோம் தற்போது முதல்வர் வேட்பாளராக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு ஆதரவாக கட்சியினர் அனைவரும் ஒட்டுமொத்தமாக செயல்பட வேண்டும்.

அதேபோல் இளைஞர் இளம்பெண்கள் பாசறை உறுப்பினர்கள் அரசின் சார்பில் வழங்கப்படும் பல்வேறு திட்டங்கள், அரசின் மானியங்கள் குறித்து பாமர மக்களும் அறிந்துகொள்ளும் வகையில் அவர்களின் இல்லங்களுக்கு நேரடியாக சென்று விளக்கி கூறுவதுடன் அவர்களுக்கு உரிய நலத்திட்டங்கள் பெற்றுத் தரவும் வேண்டும்.

மேலும் தமிழகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அண்ணா திமுக ஆட்சி கட்டிலில் அமரும் வகையில் இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை நிர்வாகிகள் அனைவரும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு பாடுபட வேண்டும்.

இவ்வாறு அக்ரி கிருஷ்ணமூர்த்தி பேசினார்.

கூட்டத்தில் மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணிச் செயலாளர் சுனில் குமார், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் நைனாக்கண்ணு, பாசறை செயலாளர் சிவக்குமார், கலைப்பிரிவு மாவட்ட செயலாளர் பாலசுப்பிரமணியம், நகர அவைத்தலைவர் பழனி மற்றும் நகர இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



அண்ணா தி.மு.க தேர்தல் பணி சூடுபிடிக்க துவங்கியுள்ளது. சென்னை சாந்தோம் பகுதியில் உள்ள சுவரில் ''கழகமே 100 ஆண்டுகள் ஆளும், கழக ஆட்சியே தொடரும்'' என்ற ஜெயலலிதாவின் சூளுரையை எழுதி முதல்வர் வேட்பாளராக எடப்பாடி பழனிசாமி அறிவிக்கப்பட்டதை குறிப்பிட்டு போக்குவரத்து கழகம் சார்பில் சின்னி என்ற ஜெயசங்கர் எழுதியுள்ள சுவர் விளம்பரம்.

# தண்டையார்பேட்டை புதிய இளைஞர் பாசறை மன்றம்: ஆர்.எஸ்.ராஜேஷ் தொடக்கி வைத்தார்



**சென்னை அக்.12–**

அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும் துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளரும் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி, அவைத்தலைவர் இ.மதுசூதனன் ஆகியோரது வழிகாட்டுதலின்படி வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்டம் ஆர்.கே. நகர் தண்டையார்பேட்டை 40 வது வடக்கு வட்டம் ஒத்தவாடை அன்னை சத்தியா நகர் பகுதியில் இளைஞர் இளம்பெண்கள் பாசறை மன்றம் திறப்பு விழா மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற இணைச் செயலாளர் ஓ.ஏ.ரவிராஜன் ஏற்பாட்டில் இன்று நடைபெற்றது.

இதில் வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட அண்ணா தி.மு.க. செயலாளரும் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் தலைவருமான ஆர்.எஸ். ராஜேஷ், கட்சி கொடியை ஏற்றி மன்ற பெயர் பலகையை திறந்து வைத்து இனிப்புகளை வழங்கினார்.

மன்ற பலகையை திறந்து வைத்து ஆர்.எஸ். ராஜேஷ் பேசுகையில் கூறியதாவது:–

இன்றைய தினம் பாசறை மன்றங்கள் திறப்பதன் மூலம் மன்ற நிர்வாகிகள் வாயிலாக மக்களுக்கான தேவைகளை பூர்த்தி செய்ய முடியும். கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு மக்களின் அடிப்படை வசதிகளை தீர்க்க அந்தந்த பகுதிகளில் இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை மன்றங்களை அம்மா தொடங்கி வைத்தார்.

மேலும் ஆர்.கே.நகர் அம்மாவின் தொகுதியாக இருந்த போது அம்மா கலைக்கல்லூரி, வருவாய் துறை அலுவலகம், மேம்பாலம், உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை மக்களுக்காக நிறைவேற்றி தந்தார்.

மக்களுக்காக நான் மக்களுக்காகவே நான் என்ற தாரக மந்திரத்தை போற்றும் வகையில் ஒவ்வொரு மன்றத்திலும் மக்களின் தேவைகளை உணர்ந்து அவர்களின் அடிப்படை பிரச்சினைகளை நிர்வாகிகள் உள்ளிட்ட 27 பேர் தீர்க்க வேண்டும். அவர்களின் அன்பை பெற்றால் நமது இயக்கத்திற்கு பெருமை சேர்க்கும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஆர்.எஸ். ஜெனார்தனம், வி.எஸ். புருஷோத்தமன், இ.வேலு மேஸ்திரி, ஆர்.நித்தியானந்தம், ஜெசிபி. சுரேஷ், டி.பிரபாகரன், எல்.எஸ். மகேஷ்குமார், பாசறை என்.குமார், எம்.ஹரிகிருஷ்ணன், எச்.எம். பாபு, வி.நட்ராஜ், எம்.ஏழுமலை, ஜி.ஜானி, ஏ. பெரியசாமி, துக்காராம், சிந்தாமணி, ஆர்.நாகரத்தினம், எஸ். மோகன் மற்றும் பாசறை நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### பெயர் மாற்றம்

Geetha Selva Kumari, தந்தை பெயர்: Pathiran Sorimuthu, பிறந்த தேதி: 14.06.1989, நெ.78, Isha Signature Villas, lake Bund Road, பள்ளிக்கரணை, சென்னை–600 100 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **GEETHA SELVAKUMARI** என்று அழைக்கப் படுகிறேன்.

Geetha Selva Kumari

### பெயர் மாற்றம்

Jayapal Durairaj, தந்தை பெயர்: துரைராஜ், பிறந்த தேதி: 25.06.1983, நெ.3/345, A.K.O.அரசு தெரு, அன்னை இந்திரா நகர், கெருகம்பாக்கம், சென்னை–600 122 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **JAYABAL DURAIRAJ** என்று அழைக்கப் படுகிறேன்.

Jayapal Durairaj

### பெயர் மாற்றம்

Mahesh, தந்தை பெயர்: தியாகராஜன், பிறந்த தேதி: 24.04.1980, நெ.17/7, கிருஷ்ண தாஸ் ரோடு, 2வது தெரு, மங்களாபுரம், சென்னை–600 012 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MAGESH** என்று அழைக்கப் படுகிறேன்.

Mahesh

### பெயர் மாற்றம்

Ganesh Kumar Ramar, தந்தை பெயர்: ராமர், பிறந்த தேதி: 21.05.1977, நெ.2/587, பிளாட் நெ.80, F1, இந்திரப்ரியா தர்ஷினி நகர், பெரும்பாக்கம், சென்னை–600 100 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SENTHURPANDIAN RAJAPALAYAM RAMAR** என்று அழைக்கப்படுகிறேன்.

Ganesh Kumar Ramar

After ten days of the publication of this notice and within three months thereafter I, **DEEPA.M**, D/o. **M.MANI**, aged 39, Permanently residing at Plot No. 7&8, Bishop David Nagar, Vellore, Tamilnadu - 632001 Intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamilnadu, bar Council Buildings, High Court Campus, Chennai-104.

Those who have any valid objections may notify the same to the bar council within 10 days.

**DEEPA.M**

### ENROLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months there after. I, V.Swapna, D/o. T.Venkateswarlu, aged 37 years, permanently residing at No.4/9, 2nd Street, K K Nagar, Nanganallur, Chennai –600 061. ntend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**V.Swapna**

*****

After ten days of the publication of this notice and within THREE months thereafter. I, P.THIYAGARAJAN, S/O S.Palanivelu, Aged 43 years, Permanently residing at No 45 , Thiruvalluvar Street, Kallakurichi & District -606 202 intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings, High Court Campus, Chennai-600 202.

Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**P.THIYAGARAJAN**

### ENROLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months there after. I, Murugan.V, S/o.T.Venugopal, aged 46 years, permanently residing at No.7/18, Door No.A1, Kamatchi Enclave, 2nd Street, South High Court Colony, Villivakkam, Chennai–600 049. Intend having my enrolment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**Murugan.V**

*******

After 10 days of the publication of this notice and within three months there after. I, Balajisrinivasan, S/o.G.Srinivasan, aged 31 years, permanently residing at A–3, Vatsalyam Apts, No.7 & 8 Reddy Kuppam Road, Saidapet, Chennai- 600 015. Intend having my enrolment as an Advocate moved before the bar council of tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

**Balajisrinivasan**

*******

***சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம், கள்ளக்குறிச்சி.***

***பி.இ.சி.ப.வ.எண்:அ6/441/2020***

*காதர்பாஷா, த/பெ. பாஷா, கச்சிராயபாளையம் கிராமம், சின்னசேலம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.*

*....... மனுதாரர்*

*அறிவிப்பு:*

*மனுதாரர் காதர்பாஷா என்கிற நான், எனது தந்தை பாஷா என்பவர் கச்சிராயபாளையம் கிராமத்தில் 22/07/2018 ல் இறந்தார் என்பதை கவனக் குறைவாக பதிவு செய்யாமல் இருந்து விட்டபடியால் மேற்படி எனது தந்தை பாஷா என்பவரின் இறப்பு சான்று வாரிசு சான்று பட்டா சிட்டா மாற்றத்திற்கு தேவைப்படுவதால் மேற்படி எனது தந்தை பாஷா என்பவரின் இறப்பு சான்று கேட்டு மேற்படி நீதிமன்றத்தில் மனு கொடுத்துள்ளேன். இம்மனுவின் மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது எழுத்து மூலமோ ஆஜராகி தங்களுடைய ஆட்சேபனைகளை இந்த விளம்பரம் வெளியான 15 நாட்களுக்குள் தெரிவித்துக் கொள்ள வேண்டும். தவறினால் எனது மனுவின் மீது எவ்வித ஆட்சேபனையும் இல்லை என மேற்படி நீதிமன்றத்தால் ஒரு தலைபட்சமாக சான்று வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.*

*பா.காதர்பாஷா,*
*மனுதாரர்.*

**மேன்மை மிகு 3வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம். கள்ளக்குறிச்சி.**

**மு.வ.எண்:9/2020**

*கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம்,கஸ்பா சின்னசேலம் நெ.22/A, தெற்கு ஒற்றைவாடை தெருவில் வசிக்கும் சுப்ரமணியன் குமாரர் பெரியசாமி.*

*....வாதி.*

*/எதிர்/*

*கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம், கஸ்பா சின்னசேலம், அருந்ததியர் தெருவில் வசிக்கும் சின்னப்பையன் குமாரர் பூமலை(எ) கோவிந்தன்1, மேற்படி பூமலை(எ) கோவிந்தன் குமாரர்கள் ராஜா2, முருகன் 3,பிராபாகர்4, ரவிச்சந்திரன்5, மேற்படி பூமலை(எ) கோவிந்தன் குமாரத்தி மீனாட்சி6.*

*... பிரதிவாதிகள்.*

*அறிவிப்பு:*

*இந்த நெம்பர் வழக்கில் வாதி,பிரதிவாதிகள் மீது தாவா விற்கிரைய உடன்படிக்கையின் படி வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களுடைய ஆட்சேபனையை தாக்கல் செய்ய வாய்தா 06/11/2020 அன்று வைக்கப்பட்டுள்ளது. அன்று காலை சுமார் 10:30 மணியளவில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களுடைய ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் தங்களுக்கு ஏதும் ஆட்சேபனை இல்லை என்று பாவித்து தங்களுக்கு விரோதமாக தீர்மானிக்கப்படும் என்பதை இந்த அறிவிப்பு மூலம் அறியவும்.*

*N.SARAVANAN.,M.A.,B.L.,*
*Advocate/commissioner of oaths,*
*Kallakurichi.*

### பெயர் மாற்றம்

RASIK HAMEED HAMZA, தந்தை பெயர்: Hameed Hamza, பிறந்த தேதி: 05.05.1962, நெ.29/1, 66, குட்டையப்பன் தெரு, 2வது தெரு, கீழ்ப்பாக்கம், சென்னை–600 010 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MOHAMMED RASIK HAMEED HAMZA** என்று அழைக்கப்படுகிறேன்.

RASIK HAMEED HAMZA

### பெயர் மாற்றம்

Nisha Rahul, கணவர் பெயர்: ராகுல் நாயர், பிறந்த தேதி: 15.11.1977, ப்ளாட் நெ.2/C, பிளாக்–9, ஜெயின்ஸ் சுந்தர்பன்ஸ் அப்பார்ட்மெண்ட்ஸ், குருசுவாமி தெரு, முகப்பேர், அம்பத்தூர், சென்னை–600 095 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NISHA DAS** என்று அழைக்கப் படுகிறேன்.

Nisha Rahul

### ஏல அறிவிப்பு

D.Kanchan. No.78, Thandavarayan Gramani Street, Tondiarpet, Chennai-81. *என்ற அடகு வணிகர் வசம் நாள் 1.1.16 முதல் 31.8.19 முடிய காலளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 3.11.20 அன்று காலை 11 மணியளவில் நெ.89/54, வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024 என்ற விலாசத்தில் எழும்பூர் தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் ஏலதாரர்* **பாஃப்னா ஆக்ஷினியர்ஸ்** *ஏலம் போடப் படும்.*

★★★★★★

Shree Mathaji 4/34, A.S.K. Nagar Main Road, Adambakkam, Chennai-88. *என்ற அடகு வணிகர் வசம் நாள் 1.1.18 முதல் 30.6.19 முடிய காலளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 22.10.20 அன்று காலை 11 மணியளவில் நெ.89/54, வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024 என்ற விலாசத்தில் எழும்பூர் தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் ஏலதாரர்* **பாஃப்னா ஆக்ஷினியர்ஸ்** *ஏலம் போடப் படும்.*

★★★★★★

Gouthamchand & Bros, 48, M.G.Road, Thiruvanmiyur, Chennai-41. *என்ற அடகு வணிகர் வசம் நாள் 1.1.16 முதல் 31.12.18 முடிய காலளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 19.10.20 அன்று காலை 11 மணியளவில் நெ.89/54, வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024 என்ற விலாசத்தில் எழும்பூர் தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் ஏலதாரர்* **பாஃப்னா ஆக்ஷினியர்ஸ்** *ஏலம் போடப் படும்.*

★★★★★★

B.Sohanlal, 44, Madhavan Street, Nehru Nagar, Velachery, Chennai-42. *என்ற அடகு வணிகர் வசம் நாள் 1.1.18 முதல் 31.8.19 முடிய காலளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 29.10.20 அன்று காலை 11 மணியளவில் நெ.89/54, வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024 என்ற விலாசத்தில் எழும்பூர் தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் ஏலதாரர்* **பாஃப்னா ஆக்ஷினியர்ஸ்** *ஏலம் போடப் படும்.*

★★★★★★

S.Ramesh Kumar, 164A/156A, Demellows Road, Pattalam Market, Chennai-12. *என்ற அடகு வணிகர் வசம் நாள் 1.1.17 முதல் 30.6.19 முடிய காலளவில் அடகு வைக்கப்பட்டு காலங்கடந்தும் மீட்கப்படாத பொருட்கள் நாள் 23.10.20 அன்று மதியம் 2 மணியளவில் நெ.89/54, வள்ளலார் தெரு, கோடம்பாக்கம், சென்னை–600 024 என்ற விலாசத்தில் எழும்பூர் தாலுக்கா, வட்டாட்சியர் அல்லது துணை வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில் ஏலதாரர்* **பாஃப்னா ஆக்ஷினியர்ஸ்** *ஏலம் போடப் படும்.*

★★★★★★

### நகை ஏல அறிவிப்பு

*கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கஸ்பா கள்ளக்குறிச்சி NO:32/44D, செக்கு மேட்டுத் தெருவில் இருக்கும் S.பிரபாபாய் நகை அடகு கடையில் 01/04/2018 முதல் 30/06/2019 முடிய அடகு வைத்து கெடுவு கடந்து மீட்கப்படாதிருக்கும் பொன்,வெள்ளி நகைகளை தேதி 22/10/2020 வியாழக்கிழமை காலை 10:30 மணியளவில் சார் ஆட்சியர் அவர்கள் உத்தரவுப்படி துணை வட்டாட்சியர் முன்னிலையில் மேற்படி கடையில் என்னால் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும். ஏலம் போட்ட தொகையில் அடகு அடகு வணிகருக்கு சேர வேண்டிய அசல்,வட்டி இதர செலவினங்கள் போக மீதி தொகை எதுவும் இருந்தால் அடகு வைத்தவர் மேற்படி வணிகரிடம் பெற்றுக் கொள்ளவும்.நோட்டீஸ் கிடைக்காதவர்களுக்கு கடைக்காரர் பொறுப்பல்ல.*

*S.கிஷன்குமார்*
*ஏலதாரர், கள்ளக்குறிச்சி.*

★★★★★

*கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டம், கஸ்பா கள்ளக்குறிச்சி NO:46,குளத்து மேட்டுத் தெருவில் இருக்கும் T.விஷால்ராஜ், காமதேனு நகை அடகு கடையில் 01/07/2017 முதல் 30/06/2019 முடிய அடகு வைத்து கெடுவு கடந்து மீட்கப்படாதிருக்கும் பொன்,வெள்ளி நகைகளை தேதி 23/10/2020 வெள்ளிக்கிழமை காலை 10:05 மணியளவில் கள்ளக்குறிச்சி சார் ஆட்சியர் அவர்கள் உத்தரவுப்படி துணை வட்டாட்சியர் முன்னிலையில் மேற்படி கடையில் என்னால் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும். ஏலம் போட்ட தொகையில் அடகு அடகு வணிகருக்கு சேர வேண்டிய அசல்,வட்டி இதர செலவினங்கள் போக மீதி தொகை எதுவும் இருந்தால் அடகு வைத்தவர் மேற்படி வணிகரிடம் பெற்றுக் கொள்ளவும்.நோட்டீஸ் கிடைக்காதவர்களுக்கு கடைக்காரர் பொறுப்பல்ல.*

*S.ஆனந்தராஜ் ஜெயின்*
*ஏலதாரர், கள்ளக்குறிச்சி.*

### தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 'ராமமந்திரம்', ராஜபாளையம் 626 117, தமிழ்நாடு
CIN : L26941TN1957PLC003566 website: www.ramcocements.in

**அறிவிப்பு**

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 47(1)(a)ன்படி, 30 செப்டம்பர் 2020ல் முடிந்த காலாண்டு மற்றும் 6 மாதங்களுக்கான தனியான மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் திங்கட்கிழமை, 2 நவம்பர், 2020 அன்று நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் இணையதளம் www.ramcocements.in மற்றும் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்படும் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் www.bseindia.com and www.nseindia.comலும் இந்த அறிவிப்பு உள்ளது.

தி ராம்கோ சிமெண்ட்ஸ் லிமிடெட்டுக்காக
இடம்: சென்னை K. செல்வநாயகம்
தேதி : 10–10–2020 செயலாளர்

### பொது அறிவிப்பு

[illegible]

### Public Notice

In the matter of Presidency Towns Insolvency Act. III of 1909 and in the matter of Mrs. Vasantha, Debtor in I.P.No.29 of 2013.

This is to inform the General Public that the above named Debtor **Mrs. Vasantha** has been adjudged as insolvent on her own petition in I.P.No.29 of 2013 by order of the learned Master, High Court, Madras dated [illegible] 2013

On a report led by the Official Assignee, High Court, Madras the Hon'ble High Court, Madras by order dated 17.12.2018, directed transfer of the proceedings in I.P.No.29 of 2013 to the file of the Special Judge TNPID Court Chennai 104

HIGH COURT, MADRAS OFFICIAL ASSIGNEE
DATED : 08-10-2020

### Public Notice

In the matter of Presidency Towns Insolvency Act. III of 1909 and in the matter of Mr.R.M.Mohun @ Mohan, Debtor in I.P.No 45 of 2012

This is to inform the General Public that the above named Debtor **Mr. R.M Mohun @ Mohan** has been adjudged as insolvent on his own petition in I.P.No.45 of 2012 by order of the learned Master, High Court, Madras dated [illegible] 2012

On a report led by the Official Assignee, High Court, Madras the Hon'ble High Court, Madras by order dated 17.12.2018, directed transfer of the proceedings in I.P.No.45 of 2012 to the file of the Special Judge TNPID Court Chennai 104

HIGH COURT, MADRAS OFFICIAL ASSIGNEE
DATED : 08-10-2020

### Public Notice

In the matter of Presidency Towns Insolvency Act. III of 1909 and in the matter of Mrs K.Jayaseeli, Debtor in I.P.No.82 of 2009.

This is to inform the General Public that the above named Debtor **Mrs. K. Jayaseeli** has been adjudged as insolvent on her own petition in I.P.No.82 of 2009 by order of the learned Master, High Court, Madras dated 05.11.2009

On a report led by the Official Assignee, High Court, Madras the Hon'ble High Court, Madras by order dated 13.08.2019 directed transfer of the proceedings in I.P.No.82 of 2009 to the file of the Special Judge TNPID Court Chennai 104

HIGH COURT, MADRAS OFFICIAL ASSIGNEE
DATED : 08-10-2020

### சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்

(இந்தியன் ஆயில் குழும நிறுவனம்)
பதிவு அலுவலகம்: 536, அண்ணா சாலை,தேனாம்பேட்டை,சென்னை–600 018.
வெப்சைட்: www.cpcl.co.in; Email id: shankarp@cpcl.co.in
Tel: 044-24349833 / 24346807 CIN: L40101TN1965GOI005389

**அறிவிப்பு**

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015–ன் கட்டுப்பாடு 29 மற்றும் கட்டுப்பாடு 47ன் படி, இதர அலுவல்களுக்கு இடையே, 30 செப்டம்பர் 2020ல் முடிந்த காலாண்டு மற்றும் அரை ஆண்டுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் புதன்கிழமை, 21 அக்டோபர் 2020 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மேற்சொன்ன அறிவிப்பினை கம்பெனியின் இணையதளம் www.cpcl.co.in மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளங்கள் www.nseindia.com மற்றும் www.bseindia.com–ல் பார்வையிடலாம்.

கம்பெனியின் உள்வர்த்தக நடத்தை குறியீடு விதிகள் மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சிற்கு 28 செப்டம்பர் மற்றும் 7 அக்டோபர் 2020 அன்று தெரிவித்தபடி, 1 அக்டோபர் 2020 முதல் 23 அக்டோபர் 2020 முடிய (இரு நாட்களும் உள்பட) சிபிசிஎல்–ன் பத்திரங்கள் வர்த்தகமானது சம்பந்தப்பட்ட அனைத்து/நியமிக்கப்பட்ட நபர்களுக்கும் மூடப்பட்டிருக்கும். கம்பெனியின் இணையதளம் www.cpcl.co.in–ல் உள்வர்த்தக நடத்தை குறியீடு விதிகள் உள்ளது.

ஒப்பம்/–
இடம்: சென்னை **(ப. சங்கர்)**
தேதி: 12.10.2020 **கம்பெனி செயலாளர்**

**சென்னை உயர்நீதிமன்றம்**
**(உயில் மற்றும் உயில் இல்லாத வழக்கு பற்றிய ஆள்வரை)**
**முதலேற்பு மனு எண். 62/2020**

இந்திய வாரிசுரிமைச் சட்டம் தொடர்பான மனுவில் 26.01.2019 அன்று இறந்து போன T.E.நடராஜன் அவர்களின் உயில் சாசனம் தொடர்பான மனு

1) N.அருள்மொழி தேவன், வயது 56
த/பெ.(லேட்) T.E.நடராஜன், H4/4
ராஜாராம் காலனி, கோடம்பாக்கம், சென்னை–24
2) மகேஷ் அருள்மொழி தேவன்
த/பெ. அருள்மொழி தேவன் நடராஜன்,
H4/4, ராஜாராம் காலனி, கோடம்பாக்கம், சென்னை–24

– மனுதாரர்கள்

எதிர்

1) அன்பரசி வயது 80, க/பெ. (லேட்) T.E.நடராஜன்,
H4/4, ராஜாராம் காலனி, கோடம்பாக்கம், சென்னை–24
2) மான்விழி.E, வயது 64, க/பெ.இளங்கோ
829, 38, 9வது தெரு, சிண்டிகேட் பேங்க காலனி,
அண்ணா நகர் மேற்கு விரிவு, திருவள்ளூர்,சென்னை–60101
3) பனிமலர் குழலி, வயது 62, க/பெ. பார்த்தசாரதி
1923, தெற்கு முனை C ரோடு,ஜெயநகர் 9வது விளாக்,
கிழக்கு பெங்களூர் தெற்கு, பெங்களூர் கர்நாடகா–560069

–எதிர்மனுதாரர்கள்

சென்னை – 600 024, கோடம்பாக்கம், ராஜாராம் காலனி, பிளாட் எண்.H4/4எண்ணில் வசித்து வந்து 26.01.2019 அன்று இறந்து போன T.E.ராஜன் அவர்களின் சொத்துக்கள் தொடர்பான மனு சென்னை உயர்நீதிமன்ற மாஸ்டர் கோர்ட்டில் 14.12.2020 அன்று காலை 10.30 மணிக்கு விசாரணைக்கு வருகிறது. மேற்படியாரின் உயில் சொத்துக்களில் ஏதேனும் பாத்தியதை கோருகின்ற அனைவரும் தங்களுக்கு தக்கதென கருதினால் நீதிமன்றம் நிர்வாகச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன் jroriginalsidemhc@gmail.com என்கிற மின்னஞ்சல் முகவரியில் தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2020ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1ம் தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது.

**C. கனகராஜன்** — **பொ.சாந்தினி ஜாஸ்மின்**
**மனுதாரரின் வழக்கறிஞர்** — **உதவி பதிவாளர்**
**413 கூடுதல் சட்ட அறைகள்** — **முதலேற்பு பிரிவு– 1**
**சென்னை உயர்நீதிமன்ற வளாகம்** — **உயர்நீதிமன்றம்**
**சென்னை– 104** — **சென்னை– 104**

விருந்தினர் குரல்

குடிகார கணவன்கள், வன்கொடுமை ஆசாமிகள், சிறுமிகள் மீது பாலியல் பலாத்கார நபர்களை

# ‘திருக்குறள்’ மூலம் நல்வழிப்படுத்தும் ‘காவல்’ பெண் அதிகாரி ஜெயலட்சுமி!

## சபாஷ், ஆவடி அனைத்து மகளிர் காவல் நிலையம்



**உறவுகள் ஆயிரம் மண்ணில் உண்டு,**

**உனக்கு நான் எனக்கு நீ என;**

**வார்த்தையில் மட்டும் அல்லாது வாழ்க்கையில் கலப்பது திருமண பந்தத்தில் மட்டும்தான்!**

**அன்னை மடி பிறந்து, மண்ணில் கண் மூடும் நாள் வரை என்னென்ன பருவங்களோ? இவற்றுள் தன்னுள் உயிர் வளர்த்து, தன்னுயிரைக் காட்டிலும் இன்னுயிர் பெரிதென எண்ணி வளர்க்கும் தாயவளும், கண்ணிமை போல் துணை நின்று காவலனாய்க் காத்து எந்நிலையிலும் கண் கலங்காதிருக்க பொறுப்பேற்கும் தந்தையுமாய்... சங்கமமாகி, இங்கே நடத்தும் குடும்ப வாழ்க்கை – கோவில் போன்றது, தெய்வீகமானது, புனிதமானது** என்று குடும்ப வாழ்க்கைக்கு கவியரசு கண்ணதாசனின் வரிகளை மேற்கோள் காட்டினார் போலீஸ் துணை கமிஷனர் ஜெயலட்சுமி.

‘திருக்குறள்’ மூலம் மக்களை நல்வழிப்படுத்தும் காவல் பெண் அதிகாரி என்று ஆழமாக அங்கீகரிக்கப்பட்டிருப்பவர். அவர் தான் மக்கள்குரலின் இன்றைய சிறப்பு விருந்தினர்.

பெருநகர மாவட்டத்தின் கீழ் வரும் காவல் நிலையங்களில் ஒன்று ஆவடி அனைத்து மகளிர் காவல் நிலையம். மக்களை நல்வழிப்படுத்தும் விதத்தில் குறிப்பாக, குடும்பப் பிரச்னை – தகராறு – மோதல் –தகாத உறவு– சிறுவர்கள் வன்கொடுமை– சிறுவர்களுக்கு பாலியல் கொடுமை என்னும் பிரச்னையோடு வரும் மக்களை நல்வழிப்படுத்தும் விதத்தில், காவல் நிலையத்தின் சுவர்களில் ‘திருக்குறள்’ எழுதப்பட்டுள்ளது.

உலகப் பொதுமறையாம் திருவள்ளுவரின் திருக்குறளில், இல்லற இயலில் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்களை எடுத்துரைத்து, புகார் யார் மீது சொல்லப்படுகிறதோ, அவர்களை அழைத்து நல்வழிப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் போலீஸ் துணை கமிஷனர் ஜெயலட்சமி, அவர் தலைமையின் கீழ் ஆய்வாளரான (இன்ஸ்பெக்டர்) டி.லதா, குழுவினர்.

### 14 குறள்கள்

காவல் நிலையத்தின் உள்ளே சுவர்களில் மொத்தம் 14 குறள்களை எழுதி வைத்திருக்கிறார்கள். இல்லற இயலில் இருந்து எடுத்திருக்கும் இந்தக் குறள்கள் குடும்ப வாழ்க்கை






எப்படி இருக்க வேண்டும் என்று போதிப்பதாகும்.

காவல் நிலையத்திற்குள் புகார் சொல்லவரும் நபர்களின் மனதில், குடும்பம் என்றால் என்ன– மனைவி, குழந்தைகள்– இல்லற வாழ்க்கை என்றால் என்ன என்பதை உள் மனதில் ஆழமாக பதிய வைக்கும் ஒரு முயற்சியே இது என்கிறார் ஜெயலட்சுமி.

சுவர்களில் திருக்குறளை எழுதி இருக்கும் முயற்சியின் காரணகர்த்தா. ‘‘நாங்கள் சொல்வதைக் கேட்டு ஒரு மாற்றம், மனமாற்றம் வந்தால் போதுமே... அதுவே மகிழ்ச்சியா, இல்லையா’’ என்கிறார் அவர்.

### ஆவடி புறநகர்ப் பகுதிகளில்

ஆவடி, ஆவடி டாங்கி தொழிற்சாலை, திருமுல்லைவாயில், பட்டாபிராம், முதபுதுப்பேட்டை, திருநின்றவூர் ஆகிய பகுதிளிலிருந்து பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான புகார்களைப் பதிவு செய்து விசாரணை நடத்தி தீர்வு காணும் காவல் நிலையம் இது.

### தினசரி 10 புகார்கள்

‘ஒரு நாளைக்கு சராசரியாக 10 புகார்கள் எங்கள் காவல் நிலையத்திற்கு வரும். இதில் குடும்பத் தகராறு, சிறுவர்கள் மீது வன்கொடுமை, சிறுமிகள் – இளம் பெண்கள் மீது பாலியல் பலாத்காரம், கள்ளக்காதல், குடிகாரக் கணவன்களால் மனைவிகள் சித்ரவதை, குழந்தைகளை அடித்து உதைத்து கொடுமைப்படுத்துதல்... இப்படி பல பிரச்னைகளோடு புகார்கள் வரும்.

### குடும்பத்தில் மகிழ்ச்சி

கணவன் – மனைவிக்கு இடையே சரியான புரிதல் இல்லாமல் போதல், ஒருவர் இன்னொருவரைப் பற்றி தவறான அபிப்பிராயத்தோடு இருத்தல் ஆகியவையே குடும்ப உறவில் விரிசலுக்கு அடிப்படை காரணமாக அமைந்து வருகிறது.

இப்படிப் பிரச்னைகளோடு வரும் கணவன் மனைவியை ஒரு அறையில் தனியாக உட்கார வைத்து ஆலோசனை வழங்குகிறோம். ஒருவருக்கொருவர் அன்பு காட்ட வேண்டும், அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும், விட்டுக் கொடுத்துப் போக போக வேண்டும்... அப்போது தான் இல்லறம் நல்லறமாகும்.

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் என்று எடுத்துரைத்து ஆலோசனை வழங்குகிறோம் என்றார் லதா.

### 25 காவலர்கள்

இந்தக் காவல் நிலையத்தில் மொத்தம் 25 காவலர்கள் இருக்கிறார்கள். பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்கொடுமையைத் தடுக்க இருக்கும் விசேஷப் பிரிவு, போலீஸ் துணை கமிஷனர் எச்.ஜெலட்சுமி தலைமையில் இயங்குகிறது. 35 காவல் நிலையங்களில் 25 நிலையங்களில் குழந்தைகளோடு நட்போடு பழகும் மையங்கள் உள்ளன. போலீஸ் என்றால் கொஞ்சமும் பயம் கூடாது. ‘‘போலீஸ் உங்களுக்கு உதவும் நல்ல நண்பன். தோழமையோடு இருப்பவன்’’ என்பதை எடுத்துக்காட்டும் விதத்தில் இந்த மையங்கள் செயல்படுகின்றன.

**காவல் நிலையத்தின் உட்புறச் சுவர்களில் ‘இல்லற இயல்’ போதிக்கும் வரிகள்**

இந்த மையத்தில் குழந்தைகள் விளையாடுவதற்கென பொம்மைகள் உள்ளன. படித்து மகிழ புத்தகங்கள் உள்ளன என்றார் எச்.ஜெயலட்சுமி.

‘‘அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது...’’

இது திருக்குறள்.

இல்வாழ்க்கை அன்பும், அறனும் உடையதாக விளங்குமானால்... அதுவே வாழ்க்கையின் பண்பும், பயனும் ஆகும். இது பொருள். இப்படி சுவரில் எழுதி வைத்திருக்கும் இல்லற இயல் சம்பந்தப்பட்ட 14 திருக்குறளைச் சொல்லி, அதற்கான அர்த்தத்தையும் தெளிவாக விளக்கி, இல்லறமே நல்லறம் என்பதை கணவன் – மனைவிக்குப் போதித்து வருகிறார் லதாவும், ஜெயலட்சுமியும்.

**‘‘வாழ்க்கை வெறுக்கத் தக்கதுமல்ல, வாழ்க்கை விரும்பத்தக்கதுமல்ல, வாழ்க்கை வாழத் தக்கதே! என்பது சான்றோரின் மொழி**

**வாசல் இல்லாத வீடும், பிரச்சனை இல்லாத மனிதனும் சிருஷ்டிக்கப் படவில்லை என்பது கவியரசு கண்ணதாசன் வாக்கு.**

**எவருக்குத்தான் வாழ்க்கை விரும்புவது போல் அமைகிறது? எந்த மனதில்தான் சஞ்சலம் இல்லை, சங்கடம் இல்லை? தன்னை ஆள்வது தவம் என்பார்கள். எங்கே மனிதன் தன்னை ஆள்கிறான்? தன் மனத்தை வென்று வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தீர்க்கமான முடிவு எடுப்பது அவ்வளவு சாதாரண விஷயமா?**

**தட்டுத்தடுமாறி கரைசேரும் ஓடம் போல் மனித வாழ்க்கை. அதுவும் நடுத்தர வர்க்கம் முதல் வறுமை கோடுகள் வரை அன்றாடம் சந்திக்கும் பிரச்சனைகள் சொல்லில் அடங்காதவை. ஒவ்வொரு நாளும் ஏன்தான் வருகிறதோ என்ற கேள்வி எழாத இதயங்கள் இல்லாமல் இல்லை.**

அன்பாலும், பாசத்தாலும், உறவுகள் பிணைக்கப்பட்டு இருந்தாலும் குழப்பங்களால் மனம் தத்தளிக்கிறது. அந்தக் குழப்பங்களுக்கு எங்களால் முயன்ற தீர்வுக்கு நாங்கள் உதவிக்கரம் நீட்டி வருகிறோம். காவல்காரன் – உங்கள் நண்பன் என்று உரக்கச் சொல்லி வருகிறோம்



என்று முத்தாய்ப்பாய் பேசியபோது ஜெயலட்சுமி கையெடுத்து கும்பிட வைத்தார். வாழ்த்துக்கள் சொல்லி விடை பெற்றோம்.



***‘‘எந்த உறவையும் முடிந்தது என்று நினைத்து முற்றுப்புள்ளி வைக்காதீர்கள். சூழ்நிலை மாறுகையில் எந்த உறவும் புதுப்பிக்கப்படும்...! அனுமதியின்றி உள்ளே வரக்கூடாது என்ற சிகப்பு எழுத்து பலகையின் அருகே நீலநிற எழுத்துக்கள். என்ன அருமையான வாசகம். யதார்த்த வாழ்க்கை இது தான். மிகச்சிறப்பான வாசகத்தைத் தேர்வு செய்து எழுதி காவல் நிலையத்திற்குள் காலடி வைக்கும் நபர்களின் ஊனக் கண்களைத் திறந்திருக்கும் முயற்சி, சபாஷ் ஆவடி மகளிர் காவல்நிலையம் என்று மகிழ்ச்சியில் திளைக்கும் போது மனக் கண் முன் மலர்கிறார் ஜெயலட்சுமி.***

### ஓராண்டுக்கு 1000 பேர் நல்வழியில்...

***★ திருக்குறளை எழுதி வைக்கக் காரணம்...***

தமிழ்நாட்டில் உள்ள காவல்நிலையங்கள் அனைத்திலும் அனைத்துத் தலைவர்களின் பொன்மொழிகள் இடம் பெற்றிருக்கும். பெண்கள் – குழந்தைகள் – குடும்பங்களைப் பொறுத்தவரையில் வாழ்வியலை வகுத்துச் சொல்லி இருக்கும் உலகப் பொதுமறை திருவள்ளுவரின் திருக்குறள் – மிகமிகப் பொருத்தமாக இருக்கும் என்று உணர்ந்தோம். அதன் எதிரொலி தான் எங்களின் இந்த திருக்குறள் பதிவு – காவல் நிலையம் என்று அருமையான முன்னுரை எழுதினார் ஜெயலட்சுமி.

***★ தினசரி கவுன்சிலிங் [ஆலோசனை – யோசனை – போதனை, நல்வழிப்படுத்த...] உண்டா...?***

ஆமாம். அன்றாட காவல் பணிகளுக்கு இடையிலும் நேரம் ஒதுக்கி, மக்களை நல்வழிப்படுத்தும் இந்த முயற்சியில் வலது காலெடுத்து வைத்திருக்கிறோம். முயன்றால் முடியாதது எதுவுமில்லையே... பகலவனுக்கு அடியில் எல்லாமே சாத்தியம் தான். *Where there is a will there is a way...* சிரித்துக் கொண்டே பதில் தந்தார்.

***★ சந்தேகம் தீரும் வரை சந்தோஷம் வரும் வரை உங்களின் கருத்து அறிவுரை கேட்டு திருப்தியோடு மனநிறைவோடு மகிழ்ச்சியோடு காவல்நிலையத்திலிருந்து நடப்பவர்கள் எத்தனை பேர்?***

60% பேர் முழு திருப்தியோடு, மனநிறைவோடு, மகிழ்ச்சியோடு, நிம்மதியோடு நடக்கிறார்கள். 30% பேர் திரும்பத்திரும்ப வருவார்கள். அவர்களுக்கு(ள்) இருக்கும் சந்தேகங்களைக் கேட்டு நிவாரணம் பெறுவார்கள். எப்படியும் பார்த்தால் ஓராண்டில் 365 நாட்களில் குறைந்தது 1000 பேருக்காவது ஆலோசனை தந்திருப்போம். நல்வழிப்படுத்தி இருப்போம்.

**– வீ.ராம்ஜீ**

# பெரம்பலூர் தொகுதி 300 மாணவர்களுக்கு எஸ்.ஆர்.எம். பல்கலைகழகத்தில் இந்த ஆண்டும் இலவச என்ஜினீயரிங் அட்மிஷன்

## டி.ஆர்.பாரிவேந்தர் எம்.பி.தகவல்

**சென்னை, அக். 12–**

**பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள 300 ஏழை மாணவர்களுக்கு கடந்த ஆண்டைப் போல இந்த ஆண்டும் இலவச என்ஜினீயரிங், விவசாய, கலை அறிவியல் படிப்புக்கு அட்மிஷன் வழங்கப்பட்டுள்ளது. தேர்வு பட்டியல் எஸ்.ஆர்.எம். பல்கலைகழக வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது என்று பெரம்பலூர் தொகுதி எம்.பியும் எஸ்.ஆர்.எம். பல்கலைகழக நிறுவனரும், வேந்தருமான டி.ஆர். பாரிவேந்தர் இதைத் தெரிவித்தார்.**

டி.ஆர்.பாரிவேந்தர் பேசுகையில், 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தொடர்களில் கலந்துகொண்டு, நம் தொகுதிக்கான தேவைகளையும், நீண்ட நாள் கோரிக்கைகளையும் பேசியுள்ளேன். இதே கோரிக்கைகளை பாரதப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினேன். மற்றும் அந்தந்த துறைசார்ந்த மத்திய அமைச்சர்களை சந்தித்தும் இக்கோரிக்கைகளை எடுத்துக்கூறி என் கடமையினை ஆற்றியிருக்கின்றேன்.

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமியை, தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து, பெரம்பலூர் பாராளுமன்றத் தொகுதிக்குட்பட்ட கோரிக்கைகளை அவரிடம் கடிதம் வாயிலாக அளித்துள்ளேன் என்றார்.

2019 நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தின்போது, என்னுடைய தனிப்பட்ட வாக்குறுதியாக ஒன்றை தெரிவித்திருந்தேன். இத்தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஆண்டு ஒன்றிற்கு, இத்தொகுதிக்குட்பட்ட 300 மாணவர்களுக்கு, எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தில் இலவசமாக பட்டப்படிப்பு படிப்பதற்கு ஆவண செய்வேன்” என வாக்குறுதி அளித்திருந்தேன். அதன்படி, கடந்த ஆண்டு 300 மாணவர்கள் எஸ்.ஆர்.எம் பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்பட்டு, கட்டணமில்லா இலவசக் கல்வியினை பெற்றுவருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, இவ்வாண்டும் 300 மாணவர்களுக்கு இலவச பட்டப்படிப்பு படிப்பதற்கு



வாய்ப்பு வழங்கப்படும் என அறிவித்து, அதற்கான விண்ணப்பங்களை ஆன்லைன் மூலம் அனுப்பச்சொல்லியிருந்தோம். அதன் அடிப்படையில் 1084 மாணவர்கள், ஆன்லைன் மூலம் விண்ணப்பித்திருந்தனர்.

அவர்களின் மதிப்பெண் அடிப்படையிலும், குடும்பச் சூழ்நிலைகளை கவனத்தில் கொண்டும், இந்த ஆண்டும் 300 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். பொறியியல், விவசாயம், கலைஅறிவியல் உள்ளிட்ட பட்டப்படிப்புகளை படிப்பதற்கான வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பட்டியலை எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தின் வெப்சைட்டில் வெளியிடப்படுவதோடு, சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கும் தனித்தனியே தகவல் அனுப்பப்படும்.

இவ்வறிவிப்பினை வெளியிட்ட பத்து நாட்களுக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பல்கலைகழக நிர்வாக அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பாடப்பிரிவுகளில் சேர்ந்துகொள்ளலாம்.

இவ்வாறு, பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதியின் தேவைகளையும், என்னுடைய தனிப்பட்ட வாக்குறுதிகளையும் என்றும் நினைவில் கொண்டு, தொடர்ந்து செயல்படுவேன் என டி.ஆர். பாரிவேந்தர் தெரிவித்தார்.

# படத் தயாரிப்பாளர் பி.விஜய ரெட்டி காலமானார்

**சென்னை, அக்.12–**

படத் தயாரிப்பாளரும், இயக்குனருமான பி.விஜய ரெட்டி சென்னையில் காலமானார். அவருக்கு வயது 84.



இவருக்கு மனைவி தமயந்தி. மகன்கள் திரிநாத் ரெட்டி, நாகி ரெட்டி, மகள்கள் நாகலட்சுமி, சியாமளா உள்ளனர்.

1970ல் ‘ரங்க மஹால் ரகஸியா’ என்னும் படத்தில் இயக்குனராக அறிமுகமானார். அது சூப்பர்ஹிட் ஆனது. தொடர்ந்து வெற்றிப் படத் தயாரிப்பாளர், இயக்குனரானார். விட்டலாச்சார்யாவின் ‘மனதும்பிடஹென்னு’ படத்திலிருந்து அவரது சினிமா வாழ்க்கை துவங்கியது.

கன்னட பிரபல நடிகர். டாக்டர் ராஜ்குமாரோடு இணைந்து மயூரா, ஹூலி ஹாலின மேவு, சீனிவாச கல்யாணம், பக்த பிரகலதா ஆகிய பக்திப் படங்களையும், ஷனாதி ஆப்னா, நா நின்னே மரேயலாரே... ஆகிய சமூகப் படங்களையும் எடுத்தவர். கிருஷ்ணா, காந்தா ராவ் உள்ளிட்ட முன்னணி நடிகர்களை இயக்கியவர்.

கன்னடத்தில் 40 படங்கள், இந்தியில் 17 படங்கள், தெலுங்கில் 6 படங்களை இயக்கி தயாரித்திருக்கிறார்.

★ வார இறுதியில் ‘அறுசுவை’ விருந்துக்கு ஆசையா?

★ பிறந்த நாள், திருமண விழா, சிறிய நிகழ்ச்சியா?

# பாலவாக்கத்தில் ‘மரோமா சூட்ஸ்’ சொகுசு ஓட்டல் திறப்பு

## ‘திராவிடியன் ஓட்டல்ஸ்’ குழுமத்திலிருந்து உதயம்

**சென்னை, அக். 12**

**சென்னையை அடுத்த பாலவாக்கம் எம்ஜிஆர் சாலையில் அதிநவீன சொகுசு அறைகளுடன் கூடிய ‘மரோமா சூட்ஸ்’ என்னும் ஓட்டலை திராவிடியன் ஓட்டல்ஸ் குருப் அமைத்திருக்கிறது.**

எடம்பிள் ட்ரீ ஹாஸ்பிட்டாலிட்டி என்னும் அமைப்போடு இணைந்து கட்டி இருக்கும் இந்த ஓட்டல் திறப்பு விழா நேற்று (ஞாயிறு) மாலை மிகச் சிறப்பாக நடைபெற்றது.

திராவிடியன் ஓட்டல்ஸ் நிர்வாக இயக்குனர் அண்ணாமலை பேசுகையில், ‘‘கனிவான உபசரிப்பு, தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு வாடிக்கையாளரின் தேவை, அவர்களின் குறிப்பறிந்து செயல்படும் ஊழியர்கள், தொழில்துறை நிபுணத்துவம் அனுபவத்தோடு செயல்பட்டு வாடிக்கையாளர்களுக்கு திருப்தி அளிக்கும் சேவை மனப்பான்மை– எங்களது நிர்வாகத்தின் சிறப்பு அம்சங்கள்’’ என்று எடுத்துரைத்தார்.

‘‘எடுத்த கடமையில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு செயல்படு; பொறுப்பானவர்களாக ஆக கண்ணியத்தோடு நடந்துகொள்; மனசாட்சிப்படி நட; வாடிக்கையாளர்களிடம் நற்பெயர் எடு, அவர்கள்தான் எந்த ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் அஸ்திவாரம்; அன்னை பூமியை நேசி, இயற்கை வளங்களை பராமரி; சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திரு’’ என்பதை நாங்களும் பயின்றிருக்கிறோம். எங்களின் ஊழியர்களுக்கும் பயிற்றுவித்து இருக்கிறோம். அடுத்த தலைமுறையினருக்கும் இந்தப் பண்புகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற நல்லெண்ணத்தை அதை ஓர் இயக்கமாக எடுத்து செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்’’ என்று அனுபவம் பேசினார் அண்ணாமலை.

12 விசாலமான குளு குளு அறைகள். உள்ளேயும் வெளியேயும் மகிழ்ச்சி தரும் விதத்தில் பிரகாசமான வெளிச்சம். கட்டிடத்தின் உள்ளே மையப்பகுதியில் நீச்சல் குளம்.






உற்றார் உறவினர்களோடு சிறிய அளவில் நடத்தும் குடும்ப நிகழ்ச்சியா? குடும்பத்தோடு பொழுதைக் கழிக்க, மகிழ்ந்து இருக்க விருப்பமா?, அலுவல் சம்பந்தப்பட்ட நிர்வாகக்குழு கூட்டமா?, சிறிய அளவிலான உறுப்பினர்களோடு வர்த்தக மேம்பாட்டு கூட்டமா?, வார இறுதி நாட்களில் எந்த ஒரு தொந்தரவும் இன்றி தனிமையில் நேரத்தை கழிக்க உத்தேசமா?, சிறிய குழுக்களாக வந்து டீம் லஞ்ச் அல்லது இரவு டின்னர் எண்ணமா?, அது– குழந்தைகள் ஆகட்டும்... இல்லை பெரியவர்களாகட்டும் அவர்களின் பிறந்த நாள் விழாவா?, திருமணநாள் கொண்டாட்டமா?.... இப்படி எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் மரோமா சூட்ஸ் சொகுசு ஓட்டல் ஏற்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நீச்சல் தெரியாதவர்கள் கூட பார்த்த மாத்திரத்திலேயே நானும் இடுப்பளவு தண்ணீரில் நின்று குளித்துப் பார்ப்போமே என்று ஆர்வத்தை தூண்டும் எழில் தோற்றத்தில் நீச்சல் குளம், கண்களுக்கும் செவிகளுக்கும் விருந்தளிக்கும் திரைப்படங்களை பார்த்து ரசிக்கும் ஹோம் தியேட்டர்.. எங்கள் ஓட்டலில் சிறப்பு அம்சங்களில் குறிப்பிடத்தக்கது.

உறுப்பினராக சேரலாம். அவர்களுக்கு பல்வேறு சிறப்பு சலுகைகள் உண்டு. காலையில் சிற்றுண்டி, பிற்பகலில் மதிய உணவு விருந்து, மாலையில் சிற்றுண்டி, இரவு விருந்து உண்டு, கான்டினென்டல் உணவு வகைகளும் பரிமாறப்படும். உள்ளூர் பானத்துடன் இங்கிலீஷ் பிரேக்பாஸ்ட்டும் வழங்கப்படும்.

‘சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற நிலையில் சுத்தமான– ஆரோக்கியமான– அறுசுவை உணவு வழங்குவோம். ஒரு தடவை வருகைதரும் வாடிக்கையாளர்களை நிரந்தரமாக தக்க வைப்போம்’ என்றும் உறுதிபடக் கூறினார் அண்ணாமலை.

விழாவின் ஒருங்கிணைப்பாளராக இருந்து, வந்தவர்களை வரவேற்று உபசரித்தார் ஜூபிடர் சதீஷ்!





# அம்மா கிச்சன்



முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆகியோர் வழிநடத்தல்படி
கழக அம்மா பேரவை சார்பில் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் ஏற்பாட்டில்

# அறுசுவை உணவை ஆரோக்கிய மருந்தாக்கி, அள்ளித்தரும் அம்மா கிச்சன் 100 நாள் சாதனை 100 ஆண்டு நிலைக்கும்

## பயனாளிகள் மனதார பாராட்டு



பசியை தாங்கிக் கொள்ளும் சக்தி பெரியது தான். ஆனால் அதைவிட பசி உள்ள ஒருவருக்கு உணவளிப்பது மிகப்பெரியது ஆகும். புரட்சித்தலைவர் முதல் புரட்சித்தலைவி அம்மா வரை தற்போது தமிழக மக்களை காத்துவரும் நமது முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் அன்னதானங்களை வழங்கி எளிய மக்களின் இதயங்களில் வாழ்ந்து வருகின்றனர். கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களை குணப்படுத்தி நோய் தடுப்பு நடவடிக்கையில் தமிழக முதலமைச்சர் சிறப்பாக செயல்படுகிறார் என்று பாரதப் பிரதமர் பாராட்டியுள்ளார்.

அதனைத்தொடர்ந்து மேலும் மெருகூட்டும் வகையில் முதல்வர், துணை முதல்வர் ஆகியோரின் வழிகாட்டுதல்படி ஒரு முன்மாதிரியாக கழக அம்மா பேரவை சார்பில் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் ஏற்பாட்டில் மதுரை மாவட்டத்தில் கொரோனா சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு ஜூலை மாதம் 4ம்தேதி முதல் 24 மணி நேரமும் அணையா அடுப்பாக 100 நாட்களுக்கு மேலாக செயல்பட்டு வருகிறது

அறுசுவையுடன் கூடிய ஆரோக்கியமான உணவு;

காலை 7 மணிக்கு கேசரி, அல்லது பணியாரம், பொங்கல், இட்லி, வடை, ஊத்தாப்பம், பூரி, குருமா, சட்னி,சாம்பார், முட்டை, மிளகுப் பால், வழங்கப்படுகிறது

காலை 11 மணிக்கு காய்கறி சூப் மற்றும் சுண்டல், மதியம் 1 மணிக்கு சாதம், சப்பாத்தி, குருமா, சாம்பார்,

ஊத்தாப்பம், கிச்சடி, சட்னி, சாம்பார், குருமா, மிளகுப் பால், ஆகிய உணவுகள் மருத்துவ ஆலோசனைப்படி ஆரோக்கியமான சத்தான உணவு வாழை இலையால் தனித்தனியாக பார்சல் செய்து அனுப்பப்படுகிறது,

அம்மா கிச்சனை சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், செய்தி விளம்பரத்துறை அமைச்சர் கடம்பூர் செ.ராஜூ, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் வி.எம். ராஜலட்சுமி, சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், மதுரை கொரோனா தடுப்பு கண்காணிப்பாளர் முதல்வர் டாக்டர் சங்குமணி உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகள் ஆய்வு செய்து தொற்று நோய்களுக்கு இந்த உணவே மருந்தாக திகழும் என்று பாராட்டினர்.

### முதலமைச்சர் பாராட்டு

முதலமைச்சர் மதுரையில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்திலும், அதன்பின் ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆய்வு கூட்டங்களில் பங்கேற்று மதுரை விமான நிலையத்தில் வந்த போது அம்மா கிச்சன் குறித்து செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

அம்மா கிச்சன் மூலம் கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது இந்த திட்டம் மிக அருமையான திட்டம். இதை செய்து வரும் அமைச்சர் ஆர்.பி.உதயகுமாரை மனதார பாராட்டுகிறேன் என்று கூறியுள்ளார்.

அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் கூறியதாவது:–

உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்த நோயை தடுக்க நடவடிக்கை எடுத்து இந்தியாவிற்கே இந்த நோயை குணப்படுத்துவதில் முன் உதாரணமாக தமிழக முதலமைச்சர் திகழ்கிறார் என்று பாரத பிரதமர் பாராட்டியுள்ளார். இது நமது இயக்கத்திற்கும், தமிழ் மண்ணிற்கும்

இந்த நோய்க்கு உணவே மருந்தாக வழங்கப்பட்டது. ஐந்து வேளையாக உணவு பிரித்து வழங்கப்பட்டது. இதுவரை இந்த 100 நாட்களில் 3 லட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த உணவுகள் எல்லாம் மருத்துவரின் ஆலோசனைப்படி வழங்கப்பட்டு வருகிறது. தற்போது நூறாவது நாளை அம்மா கிச்சன் எட்டியுள்ளது. கடைசி நோயாளி இருக்கும் வரை அம்மா கிச்சன் அணையா நெருப்பாக இருக்கும் என்று கூறினார்.

**கொரோனா வார்டில் பணிபுரியும் மருத்துவர் கூறியதாவது;** பொதுவாக ஒரு நோயாளிக்கு முக்கியம் உணவாகும். தற்பொழுது அதிக அளவில் மருந்துகள் உட்கொள்ளும் போது சரியான முறையில் உணவு எடுத்துக் கொண்டால் தான் நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். தற்போது முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆணைக்கிணங்க அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் ஏற்பாட்டில் கடந்த 100 நாட்களாக இங்கு சிகிச்சை பெறுபவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. இந்த உணவை நாங்களும் சோதனை செய்தோம் மிகவும் நன்றாக உள்ளது என்று கூறினார்.

**பிரபு என்பவர் கூறியதாவது;** அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்று வந்தேன். எனக்கு காலை, மதியம், இரவு என மூன்று வேளையும் சுடச்சுட உணவும் மற்றும் காலை, மாலை தானியங்கள், சூப் வகைகள், இஞ்சி கலந்த தேநீர், தக்க நேரத்தில் வழங்கினார்கள். குறிப்பாக முதலமைச்சர், துணை முதலமைச்சர்



முதலமைச்சருக்கும், துணை முதலமைச்சரும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறினார்.

**பாத்திமா என்ற பெண்மணி கூறியதாவது:** நான் தோப்பூரில் உள்ள அரசு மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பெற்றேன். வெளியில் சமைக்கும் உணவு எனக்கு சேராது. தற்போது முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆணைக்கிணங்க அம்மா கிச்சன் மூலம் வீட்டு சமையலை போல் மூன்று வேளையும் சுடச்சுட உணவு வழங்கினர்.

தற்போது குணமடைந்து வீட்டுக்கு வந்து விட்டேன். இதற்கு அங்கு வழங்கப்பட்ட உணவு தான் முக்கிய காரணமாக இருந்தது. எங்களைப்





## 24 மணி நேரம் அணையா அடுப்பு

நாள்தோறும் கொரோனா தொற்றுநோயாளிகள், அங்கு பணி புரியும் மருத்துவர்கள் , மருத்துவ ஊழியர்கள், காவல்துறை அதிகாரிகள், துப்புரவு பணியாளர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது. இந்த உணவு தயாரிக்கும் பணியில் 300 பேர் ஷிப்ட் முறையில் பணியாற்றுகின்றனர். தொடர்ந்து 24 மணி நேரமும் அணையா அடுப்பாக செயல்படுகிறது. இந்த உணவுகளை கொண்டு செல்ல ஐந்து சிறப்பு வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இதைத்தொடர்ந்து நூறாவது நாளை முன்னிட்டு மதுரை அம்மா கிச்சனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் புரட்சித்தலைவி அம்மாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து கழக அம்மா பேரவை செயலாளரும், மதுரை புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான ஆர்.பி.உதயகுமார் மரியாதை செய்தார்.

இந்த நிகழ்ச்சியில் மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் வி.வி.ராஜன் செல்லப்பா, கழக வழிகாட்டுதல் குழு உறுப்பினர்கள் இரா.கோபால கிருஷ்ணன், கே.மாணிக்கம் எம். எல்.ஏ, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ்சரவணன், பா.நீதிபதி, பெரியபுள்ளான் என்ற செல்வம், உட்பட பலர் பங்கேற்றனர்.



புளிக்குழம்பு, ரசம், மோர், கூட்டு, பொரியல், ஊறுகாய், அப்பளம், முட்டை வழங்கப்படுகிறது.

மதியம் 4 மணிக்கு சுண்டல், பாசிப்பருப்பு, இஞ்சி டீ, மாலை இரவு 7 மணிக்கு இட்லி, சப்பாத்தி,

டாக்டர் சந்திரமோகன், மாவட்ட கலெக்டர் வினய், மாநகராட்சி ஆணையாளர் விசாகன், மற்றும் மதுரை மாவட்ட கொரோனா தடுப்பு அலுவலர் டாக்டர் மருது பாண்டியன், மதுரை ராஜாஜி மருத்துவமனை



உணவு வழங்கப்பட்டு வருகிறது அம்மா அரசுக்கு இணைந்து மக்கள் சேவை ஆற்றும் பணிக்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்

இந்தத் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கும் அமைச்சர் ஆர். பி.உதயகுமாருக்கும், அவரோடு இணைந்து பணியாற்றும் அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் பாராட்டும் நன்றியையயும் தெரிவித்துக் கொள்கிறேன்

சோதனையான நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அம்மா கிச்சன் மூலம் சத்தான உணவுகளை கொடுத்து அதன் மூலம் குணமடைந்து வீடு திரும்ப காட்சி ஒரு முன் உதாரணமாக அமைந்துள்ளது. எந்த ஒரு கட்சியும் செய்யாத செயலை இந்த காலகட்டத்தில் 100 நாட்களாக தொடர்ந்து அர்ப்பணிப்பு உணர்வுடன் நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

இதில் எந்த பிரதிபலனும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த சோதனையான நேரத்திலும் கழக கட்சிக்கு துணையாக நிற்க வேண்டும் என்று கழக அம்மா பேரவை அரசுடன் இணைந்து பணியாற்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவை கொடுத்து அவர்கள் அதிலிருந்து மீள வேண்டும் என்ற உன்னத பணியில் செயல்பட்டு வருகிறது என்று கூறினார்.

### துணை முதலமைச்சர் பாராட்டு

மதுரையில் அம்மாவிற்கு மங்கா புகழாக திகழும் வண்ணம் அம்மாவின் திருப்பெயரால் அம்மா கிச்சன் என்ற பெயரில் கொரோனா தொற்றுநோய் பாதித்தவர்களுக்கு ஆரோக்கியமான சத்தான உணவு

கிடைத்த பெருமையாகும்,

ஆரம்பத்தில் மதுரை மாவட்டத்தில் இந்த நோயின் தாக்கம் 18 சதவீதமாக இருந்தது. தொடர்ந்து முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் வழிகாட்டுதலால் இந்த நோயின் தன்மை தற்போது 2.5 சதவீதமாக குறைந்துள்ளது,

குறிப்பாக மருந்தே கண்டுபிடிக்காத ஆணைக்கிணங்க கழக அம்மா பேரவை சார்பில் வழங்கப்படும் உணவு மிகவும் ருசியாக எங்கள் இல்லங்களில் சமைப்பது போல் உள்ளது.உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்பதைப்போல் இன்றைக்கு தக்க மருத்துவ வசதிகள் செய்து கொடுத்து உயிரை காப்பாற்றி, வயிற்றுக்கு வயிறார உணவு வழங்கிய போன்ற ஏழை எளிய மக்களுக்கும், இதுபோன்ற உதவிகளை செய்து வரும் முதலமைச்சருக்கும், துணை முதலமைச்சரும் எங்கள் குடும்பத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அம்மா கிச்சன் நூறாண்டு பேசும் சாதனையாகும் என்று கூறினார்.



Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, 1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai 600024 on behalf of M/s. Newsmen Associates Limited.
நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733900, 24733910, E–mail : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு: 24734700, பேக்ஸ்: 24732700, 24735700 இமெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல்